# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் – 23 இதழ் – 7 ஜூலை 2010

தனிப் பிரதி ரூ. 8/-




கிறிஸ்துவின் சபை

காங்கயம் 638 701. தமிழ்நாடு. இந்தியா.

04257 - 230030, 98427 - 30382, 99655 - 30385

# BIBLE MEDITATION

## TV PROGRAM





## ஆசானின் அறிவுரையில்...


1. ஆசிரியர் உரை ........ 1
2. நாம் ஏன் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம்? ........ 10
3. பெண்கள் பகுதி ........ 15
4. வாலிபர் பகுதி ........ 18
5. சிறுவர் பகுதி ........ 22
6. பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தல் ........ 24
7. துன்பப்படும் கர்த்தருடைய தாசன் ........ 28
8. நீங்கள் சேர்ந்துள்ள இடம்! ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 23 JULY - 2010 Issue - 7


ஆசிரியர் உரை

## "பாதுகாப்பும், அடைக்கலமும்"

பாதுகாப்பு அல்லது பாதுகாப்பு உணர்வு என்பது, உலகில் வாழும் அனைத்து உயிரினங்களிடத்திலும் காணப்படும் பொதுவான ஒன்றாகவே உள்ளது. ஒருவேளை அவை சிறியவை களாக இருந்தாலும், பெரியவைகளாக இருந்தாலும் இவ்வுணர் வை நாம் நிச்சயமாகவே அவைகளிடம் காண முடியும். எறும்பு புற்றை உண்டாக்குவதும், எலி வங்கு பறிப்பதும், குருவி கூடு கட்டுவதும், நரி குழிகளில் அண்டிக்கொள்வதும், சிங்கம் குகையைத் தேடிக்கொள்வதும் இந்த உணர்வினடிப்படையில் தான். இவ்வுணர்வுக்கு, உயிரினங்களின் சிகரமாக விளங்கும் மனிதனும் விதிவிலக்கானவனாக இல்லை. சரீரப்பிரகாரமாகத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்ற அந்த உணர்வு அவனிடம் எப்போதும் மிகுந்து காணப்படுகிறது. அதற்காக மனிதன், தான் உண்ணும் உணவிலும், உடுத்தும் உடையிலும் செய்யும் வேலையிலும், வசிக்கும் இடத்திலும் அதிகம் கவனம் செலுத்துகிறான். இப்படிக் கவனம் செலுத்திக் காரியம் செய்தாலும், அதிலே ஏதாகிலும் தவறு நேர்ந்துவிட்டால் என்ன செய்வது என்று சிந்தித்து, அதற்காகவும் மனத்தளவில் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளுகிறான். அப்படித்தானே

இப்படி அழிந்துபோகும் சரீரத்திற்கும், சரீர வாழ்விற்கும் பாதுகாப்பு வேண்டுமென்று நினைக்கும் மனிதன், தனக்குள்ளாக என்றும் அழியாமல் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கும் ஆத்துமா விற்குப் பாதுகாப்பு வேண்டுமென்று சுத்தமாகக் கவலைப்படு

வதில்லை. ஆனால், மனிதனின் சரீரத்தையும், ஆன்மாவையும் படைத்த தேவன் இவ்விரண்டின் மீதும் அக்கறையுள்ளவராயி ருந்து, இரண்டுமே பாதுகாப்பாக இருக்கவேண்டுமென்று எண்ணி செயல்பட்டு வந்திருக்கிறார். அது முற்பிதாக்களின் காலமாக இருந்தாலும், மோசேயின் காலமாக இருந்தாலும், கிறிஸ்துவின் காலமாக இருந்தாலும் இதுதான் உண்மை. இப்படி மனிதனின் பாதுகாப்பில் அக்கறை செலுத்தும் தேவன், *அவனுக்கான பாதுகாப்பு எங்கே இருக்கிறது என்பதையும் தவறாமல் வெளிப் படுத்தியுள்ளார்.*

இங்கே ஒரு முக்கியமான கருத்தை நாம் கவனிக்காமல் விட்டு விடக் கூடாது. தேவன் மூன்று காலங்களிலும், பாதுகாப் பை ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்திருக்கிறார் என்று சொல்லும் போது, அப்படியானால், ஒருவன் மற்ற இடங்களிலிருந்தால் தேவனால் அவனைப் பாதுகாக்க முடியாதா என்ற கேள்வி எழ வாய்ப்புண்டு. ஆனால், தேவனாலே ஒன்று முடியுமா அல்லது முடியாதா என்ற கேள்விக்கு எப்பொழுதும் இடமில்லை. ஏனெனில், "தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை" (லூக். 1:37) என்று வேதாகமம் திட்டமாகக் கூறுகிறது. சர்வ வல்ல தேவன், தான் நேசிக்கும் மனிதனுக்குக் கொடுக்க விரும்பும் ஆசீர்வாதத்தையும், பாதுகாப் பையும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தான் கொடுக்க முடியும் என்றோ அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தான் தரமுடியும் என்றோ அல்லது ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் தான் கூட்டி வழங்க முடியுமென்றோ சொல்லி அவருடைய வல்லமைக்கு நாம் எல்லை வகுக்கக் கூடாது. அதே நேரத்தில், தேவன் தன்னுடைய காரியங்களை அவருடைய அநந்த ஞானத்தைக் கொண்டு, அவர் வகுத்துள்ள திட்டத்தின்படியும், ஏற்படுத்தியுள்ள விதிமுறைகளின்படியும் தான் நாம் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார் என்பதையும் நாம் புரிந்து கொள்ளத் தவறி விடக்கூடாது. தேவனுடைய ஆசீர்வாதத்தையும், பாதுகாப்பையும், அடைக்கலத்தையும் பெற்றுக்கொள்ள விரும்பும் மனிதன் இவ்வுண்மையை எப்பொழுதும் தன் மனதில் இருத்திக் கொள்வது அவசியம்.

சரி, இந்த உண்மையை மனதில் இருத்தினவர்களாக, தேவனாலே மனிதனுக்காக வெளிப்படுத்தப்பட்ட பாதுகாப்பு, ஒவ்வொரு காலத்திலும் எங்கெங்கே வைக்கப்பட்டிருக்கிறதென்று கண்டு, அவைகளின் மூலம் நமக்கு என்ன பாடம் கிடைக்கிற தென்று பார்ப்போம்.

## I நோவாவின் நாட்களில் பேழைக்குள் பாதுகாப்பு

*முதலாவது,* சர்வ வல்ல தேவன், தமது அநந்த ஞானத்தின் படியாக நோவாவின் நாட்களில் பாதுகாப்பை எங்கே வைத்தா ரென்று பார்ப்போம்.

நோவாவின் நாட்களில், அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும் அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாதது என்றும் கண்டு தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டாரென்று காண்கிறோம். (ஆதி. 6:5-6) தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணனாக அவர் இருப்பதால் (ஆபகூக். 1:13) பாவத்தால் நிறைந்த பூமியை அழிக்க அவர் மனதில் எண்ணங் கொண்டார். ஆயினும், தம்மைப் பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்காகத் தம்முடைய கண்களை பூமியெங்கும் உலாவ விடும் தேவனின் கண்கள் (2 நாளா 16:9) உத்தம இருதயத்தோடு வாழ்ந்து கொண்டிருந்த நோவாவைக் கண்டது. இதன் மூலம் நோவாவுக்கு அவருடைய கண்களில் கிருபை கிடைத்தது. (ஆதி. 6:8).

நீதிமான்களை ஒருபோதும் கைவிடாத பரலோக தேவன் நோவாவைக் காப்பாற்றும்படியாய் ஒரு பேழையை உண்டு பண்ணச் சொல்லி, அதற்கான அளவுகளையும் துல்லியமாகக் கொடுத்தார். ஆதி. 7:22 சொல்லுகிறது, "***நோவா அப்படியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான் என்று***" பிறகு, "நாற்பது நாள் இரவும், பகலும் பூமியின் மேல் பெருமழை பெய்தது" (7:12) அன்றைய தினமே நோவாவும், நோவாவின் குமாரராகிய சேமும், காமும், யாப் பேத்தும், அவர்களுடனே கூட நோவாவின் மனைவியும் அவன் குமாரரின் மூன்று மனைவிகளும் **பேழைக்குள்** பிரவேசித்தார்கள். (7:13) பெருவெள்ளம் காரணமாக, "வெட்டாந்தரையில் உண்டான எல்லாவற்றிலும் நாசியிலே ஜீவ சுவாசமுள்ளவைகள் எல்லாம் மாண்டு போயின" (7:22) என்றும், ***நோவாவும் அவனோடே பேழையினுள்ளிருந்த, உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்டது*** (7:23) என்று காண்கிறோம்.

இங்கே நாம் ஒரு கேள்வியை, நம் குறைந்த அறிவைக் கொண்டு எழுப்ப முடியும். நோவாதான், நீதிமானும், உத்தமனுமாயிற்றே; அவனைக் காப்பாற்ற தேவன் 120 ஆண்டுகள் காக்க வைத்து, பாடுகள் படவைத்து மழையையும், பெருவெள்ளத்தையும், வரவழைத்து, அதிலிருந்து காப்பாற்றப்பட பேழைக்குள் பிரவேசி என்று கட்டளையும் கொடுத்து, இப்படியெல்லாம் செய்துதான் அந்த நீதிமானைக் காப்பாற்ற வேண்டுமா? நோவாவைக் காப்பாற்ற தேவனுக்கு வேறு வழியே இல்லையா? என்று. நமது அறிவின்படி பார்த்தால், இப்படிக் கேட்பது நியாயமாகவே தெரிகிறது. ஆனால், இங்கே ஒன்றை நாம் கண்டிப்பாகப் புரிந்து கொள்ள வேண்டும். சர்வ வல்ல தேவனுக்கு நோவாவைக் காப்பாற்ற பெருவெள்ளம், பேழை என்று பல ஆயிரம் வழிகளை உண்டாக்கியிருக்க முடியும். 120 ஆண்டுகள் காக்க வைத்து

காப்பாற்ற வேண்டிய அவசியம் அவருக்கில்லை. நொடிப் பொழுதில் பூமியை நிக்கிரகம் செய்து, இமைப் பொழுதில் நோவாவைக் காப்பாற்றியிருக்கவும் முடியும். ஆனால், தேவன் **தமது திட்டத்தின்படி ஒரு வழியைத் தேர்ந்தெடுக்கும்போது, இப்படித்தான் நீ செய்ய வேண்டுமென்று கட்டளையிடும் போது, அதை நாம் ஏன் என்று கேட்க முடியாது. கேட்கவும் கூடாது.**

தேவனை எதிர்த்து, அதன் விளைவாக மாடுகளைப் போல் புல்லைத் தின்ற பிறகு புத்தி வந்த ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தேவனுடைய வல்லமை பற்றிக் கூறுவதைக் கவனியுங்கள். "பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படு கிறார்கள். அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையை யும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார்". **அவருடைய கை யைத் தடுத்து அவரை நோக்கி; என்ன செய்கிறீரென்று சொல்லத் தக்கவன் ஒருவனும் இல்லை என்று** (தானி. 4:35).

அருமையானவர்களே, இதுதான் உண்மை. ஆம், தேவன் மனிதனுக்காக ஒரு வழியைத் தெரிந்தெடுக்கும் போது, அதற்குத் தன்னை ஒப்புக் கொடுக்க வேண்டியது மனுஷர் மேல் விழுந்த கடமை. பேழைக்கு வெளியே தேவன் நோவாவிற்கு இரட்சிப் பைக் கட்டளையிட்டிருக்கலாம். கட்டளையிட்டிருக்கவும் முடியும். ஆனால், அவர் அப்படிச் செய்வில்லை. தேவன் ஒன்றைச் சொல்லி விட்டால், அவன் மாற்று வழிகளை தேவனிடம் கேட்கக் கூடாது. ஒன்று, தேவன் சொன்னபடி செய்து அவன் தன்னைக் காப்பாற் றிக் கொள்ளவேண்டும் அல்லது தேவ தண்டனைக்குத் தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இரண்டிற்கும் இடைப்பட்டது எதுவுமில்லை.

"*பேழைக்குள் தான் இரட்சிப்பு*" என்று நோவாவிற்கு தேவனால் சொல்லப்பட்டபோது, அவன் அதை ஏற்றுக் கொண்டான். இது குறித்து எபிரெய ஆசிரியர் சொல்லும் போது, **விசுவாசத்தினாலே நோவா தற்காலத்தில் காணாதவைகளைக் குறித்துத் தேவ எச்சரிப்புப் பெற்று பயபக்தியுள்ளவனாகி தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணி னான், அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளி யானான்.** (11:7).

ஆம், விசுவாசத்தினாலே, தேவன் சொன்னதை ஏற்றுக் கொண்டான். விசுவாசத்தினாலே தேவன் சொன்னதற்குக் கீழ்ப் படிந்தான். விசுவாசத்தினாலே தன்னையும், தன் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொண்டான். விசுவாசத்தினாலே, ஆக்கினையிலி ருந்து தப்பித்துக் கொண்டான். விசுவாசத்தினாலே

நீதிமானென்று சாட்சி பெற்றான். பேழை அவனையும், அவன் குடும்பத்தையும் இரட்சித்தது. விளங்குகிறதா?.

## II மோசேயின் நாட்களில் வீட்டினுள் பாதுகாப்பு

*இரண்டாவதாக*, பரலோகத்தின் தேவன், தமது அநந்த ஞானத்தின்படியாக, மோசே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த போது *பாதுகாப்பை* எங்கே வைத்தாரென்று பார்ப்போம்.

யாக்கோபின் நாட்களில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தி லிருந்து தப்பிக்க (ஆதி. 42;2,3) தானியங் கொள்ளும்படி எகிப்துக்குச் சென்ற யாக்கோபின் குமாரர்கள், ஜீவரட்சணை செய்யும்படி தேவனால் அனுப்பப்பட்டது (ஆதி. 45:5) யோசேப் பின் தயவினாலே எகிப்தில் குடியேறி, யோசேப்புக்கு பிறகு அடிமைகளானார்கள். பிறகு, அவர்கள் எகிப்தின் ஆளோட்டி களால் கடுமையாக நடத்தப்பட்டதின் விளைவாக எழுந்த கூக்குரல் தேவ சமூகத்தை எட்டியது. (யாத். 2:7) அவர்களை விடுவிக்க சித்தங் கொண்டு, தேவன், மோசே என்ற தேவ மனிதனை எழுப்பினார். அவன் பார்வோனுக்கு முன்பாகத் தான் தேவனால் அனுப்பப்பட்டவன் என்பதை நிரூபிக்கும்படியாகவும், தேவனு டைய வல்லமையை அவனுக்கு உணர்த்தும்படியாகவும் வாதை களை நடப்பித்தான்.

வாதைகளால் வந்த உபாதைகளினிமித்தம் அவன் மிரண்டு போனாலும், அந்த வாதைகள் அவன் இருதயத்தை இளக்கு வதற்குப் பதிலாக இறுக்கியது. அதினால், இஸ்ரவேல் ஜனங் களைப் போகவிடமாட்டேன் என்றான். ஒன்பது வாதைகளைக் கண்டும் அவன் அசரவில்லை. ஒன்பதாவது வாதையாகிய காரிரு ளின் போது பார்வோன் மோசேயை நோக்கி என்னைவிட்டு *அப்பாலே போ, நீ இனி என் முகத்தை காணாதபடி எச்சரிக்கை யாயிரு; நீ இனி என் முகத்தை காணும் நாளில் சாவாய் என்றான்* (யாத். 10:28) இந்த எகிப்திய பார்வோனை வழிக்குக் கொண்டு வர தேவனுக்குத் தெரியாதா என்ன? இவன் ஏதோ, திக்குவாய் மோசேயோடு மோதிக்கொண்டிருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டான், பாவம். மோசே பார்வோனால் விரட்டப்பட்ட நிலையில் கர்த்தர் மோசேயைப் பார்த்து, இன்னும் ஒரு வாதை யைப் பார்வோன் மேலும், எகிப்தின் மேலும் வரப்பண்ணுவேன்; அதற்குப்பின் அவன் உங்களை இவ்விடத்திலிருந்து போக விடுவான்; சமூலமாய் உங்களைப் போக விடுவதுமல்லாமல், உங்களை இவ்விடத்திலிருந்து துரத்தியும் விடுவான் என்றார் (யாத். 11:1). இங்கே தேவன் சொல்லும் கடைசி வாதை என்ன வெனில், *அப்பொழுது சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளை முதல் எந்திரம் அரைக்கும்*

அடிமைப் பெண்ணுடைய தலைப்பிள்ளை வரைக்கும் எகிப்து தேசத்திலிருக்கிற முதற்பேரனைத்தும், மிருக ஜீவன்களின் தலையீற்றனைத்தும் சாகும் என்றார் (11:5).

இப்படி எகிப்தின் தலையீற்றுகள் சாகும் என்று தேவன் சொன்னாலும், இஸ்ரவேலின் தலையீற்றுகள் அனைத்தையும் இரட்சிக்க சித்தம் கொண்டு, அதற்கான வழிமுறைகள் என்ன வென்று வெளிப்படுத்தினார். எப்படி நோவா பேழையை உண்டு பண்ணுவதற்குக் குறிப்பாய்க் காரியங்களைச் சொன்னா ரோ அதுபோலவே, இவர்களை இரட்சிப்பதற்கும் திட்டமான அறிவுரைகளைத் தெளிவாகத் தந்தார். ஆம், அவர்கள் அப்படிப் பஸ்காவை அனுசரிக்க வேண்டுமென்பதை வரையறுத்துத் தந்தார். வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டி, அதற்கு ஒரு வயது, அது பழுதற்றது, அதைச் சாப்பிடத்தக்க அளவு ஆட்கள், சாயங் காலத்தில் அடிக்க வேண்டும், நிலைக்கால்களிலும், மேற் சட்டத் திலும் இரத்தம் தெளிக்க வேண்டும். நெருப்பினால் சுட்டு புளிப் பில்லாத அப்பத்தோடும், கசப்பான கீரையோடும் சாப்பிட வேண்டும் என்று. (யாத். 12:1-11).

இப்படியாகக் கொடுக்கப்பட்ட கட்டளைகளில் கவனிக்கத் தக்கது 12:22ல் உள்ளது. "ஈசோப்புக் கொழுந்துகளின் கொத்தை எடுத்துக் கிண்ணியில் இருக்கும் இரத்தத்தில் தோய்த்து அதில் இருக்கும் அந்த இரத்தத்தை வாசல் நிலைக்கால்களின் மேற் சட்டத்திலும், வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும், தெளியுங் கள், விடியற்காலம் வரைக்கும் உங்களில் ஒருவரும் வீட்டு வாசலை விட்டுப் புறப்படவேண்டாம்" இது தேவக்கட்டளை மீறிப் புறப்பட்டால் என்ன ஆகும்? பாதுகாப்பு இருக்காது. செத்துப்போக வேண்டும். அங்கே, இரட்சிப்பு வேண்டுமானால், தேவன் கட்டளையிட்ட எல்லாவற்றையும் செய்து, வீட்டிற்குள் ளும் இருக்க வேண்டும்.

நாம் இங்கே மறுபடியும் கேட்கலாம், வானத்தையும் பூமியையும் வார்த்தையின் வல்லமையினால் உண்டாக்கின தேவனுக்கு இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்தி லிருந்து இரட்சிக்க வேறு வழியே கிடையாதா என்றும், இரத்தந் தெளிக்கப்பட்ட வீட்டிற்குள் இருந்தால் தான் இரட்சிப்பா என்றும். அன்பானவர்களே, தேவன் எப்படி வேண்டுமானாலும் அவர் களை இரட்சித்திருக்க முடியும். அவருடைய வல்லமைக்கு எல்லையில்லை. ஆனால், அவர்கள் இரட்சிக்கப்பட இரத்தமும், வீட்டிற்குள் இருப்பதும் அவசியம் என்று தேவன் சொல்லி விட்டால் அதற்குமேல் நாம் பேச நமக்கு என்ன யோக்கியததை இருக்கிறது? பக்தன் யோபு, " ....என் கையினால் என் வாயைப் பொத்திக் கொள்ளுகிறேன் " (யோபு 40:3) என்பது போல் தான் நாம் செயல்படவேண்டும். நாம் அழிவிலிருந்து காப்பாற்றப்

படும்படியாய், இரட்சிக்கப்படும்படியாய் தேவன் எவைகளை யெல்லாம் சொல்லியிருக்கிறாரோ அவைகளையெல்லாம், சாமுவேல் பிள்ளையாண்டான் போல், "கர்த்தாவே செல்லும், அடியேன் கேட்கிறேன்" என்று செயல்பட வேண்டும். அப்படிச் செய்தால் தான் நம்முடைய ஆன்மீக வாழ்வில் நாம் காப்பாற்றப் படுவோம்.

ஆம், எகிப்தின் விடுதலையின்போது, "வீட்டிற்குள்" இருந்தவர்கள் தான் காப்பாற்றப்பட்டார்கள்.

### III. கிறிஸ்துவின் காலத்தில் கிறிஸ்துவின் சபைக்குள் பாதுகாப்பு

*மூன்றாவதாக,* தம்முடைய நித்திய தீர்மானத்தின்படி, தமது ஒரே பேறான குமாரனை நமக்காக பூமிக்கு அனுப்பிக் கொடுத்த தேவன் கிறிஸ்துவின் காலத்தில் வாழும் நமக்கு, *பாதுகாப்பை* எங்கே வைத்திருக்கிறார் என்று பார்ப்போம்.

முற்பிதாக்களின் காலத்தில் வாழ்ந்த நோவாவின் நாட்களில் பாதுகாப்பும், இரட்சிப்பும் *பேழைக்குள்* இருந்தது. நியாயப்பிரமாணத்தின் காலத்தை ஆரம்பித்து வைத்த மோசேயின் நாட்களில் பாதுகாப்பும், இரட்சிப்பும் *வீட்டிற்குள்* இருந்தது. அப்படியானால், கிறிஸ்துவின் காலத்தில் வாழும் நமக்குப் பாதுகாப்பும், இரட்சிப்பும் எங்கே உள்ளது? வேதாகமம் இதுபற்றி நமக்கு என்ன கூறுகிறது?

அப்போஸ்தலன் பவுல், தான் விசுவாசத்தில் பெற்றெடுத்த உத்தம குமாரனுக்கு எழுதும் போது, "எல்லா மனுஷரும் இரட்சிக் கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" என்கிறார். (I தீமோ. 2:4) இப்படி மனிதனின் இரட்சிப்பை விரும்பும் தேவன், அந்த இரட்சிப்பை எங்கே வைத்துள்ளார்? அதே குமாரனுக்குத் தான் எழுதின அடுத்த நிருபத்தில் இதற்கான பதிலை பவுல் கொடுத்துள்ளார். அங்கே, *கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பு* என்றுள்ளது (II தீமோ. 2:10) அதாவது, இரட்சிப்பு கிறிஸ்து இயேசுவினால் கிடைக்கிறது. மேலும், பேதுரு ஆலோசனை சங்கத்தாருக்குப் பதிலளித்த போது, மிகத் தைரியமாய், "*அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவும் இல்லை என்றான்*" (அப். 4:12).

மேற்காணும், வசனங்கள் மனிதனிடம் தேவன் விரும்பும் இரட்சிப்பு, கிறிஸ்துவுக்குள் தான் என்று உறுதியாகக் கூறுகிறது. கிறிஸ்துவுக்குள் தான் இரட்சிப்பு என்பதும், *கிறிஸ்து காட்டின சபைக்குள் தான் இரட்சிப்பு* என்பதும் ஒன்றுதான். எப்படியெனில், தேவன், "இயேசுவை உன்னதங்களில் தம்முடைய

வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் எல்லா வற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய *சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.* (எபே. 1:21-23). *கிறிஸ்து சபைக்குத் தலையாக இருக்கும் போது, கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பு என்பதை, கிறிஸ்துவின் சபைக்குள் இரட்சிப்பு என்று சொல்லுவதில் என்ன தவறு இருக்கிறது?* கிறிஸ்துவையும், சபையையும் நாம் பிரிக்க முடியாது. எப்படியெனில், சபையைத் துன்பப்படுத்தின சவுலை தமஸ்கு செல்லும் வழியில் சந்தித்த இயேசு அவனிடம் என்ன சொன்னார்? *ஆண்டவரே, நீர் யார்?* என்ற கேள்விக்கு, *நீ துன்பப் படுத்துகிற இயேசு நானே* என்றார். சவுல், இயேசுவையா துன்பப்படுத்தினான்? அவன் சபையைத் தானே துன்பப்படுத்தி னான். அப்படியானால், இயேசு, ஏன் தன்னைத் துன்பப்படுத்தின தாகக் கூறுகிறார்? கிறிஸ்துவும், சபையும் ஒன்று என்பது தானே அதன் பொருள். ஆக, கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பு என்பதை, கிறிஸ்துவின் சபைக்குள் இரட்சிப்பு என்று நாம் தாராளமாக, தைரியமாகக் கூறலாம்.

கிறிஸ்துவுக்குள்ளும், கிறிஸ்துவின் சபைக்குள்ளும் தான் இரட்சிப்பு எனில், கிறிஸ்துவுக்குள்ளாக, கிறிஸ்துவின் சபைக்குள் ளாக ஒருவன் வருவது எப்படி? இதுபற்றி பவுலடியார் கொரிந்தி யருக்கு எழுதும்போது, ஒருவன் *கிறிஸ்துவுக்குள்ளிருந்தால்* புது சிருஷ்டியாயிருக்கிறான் என்கிறார். (கொரி. 5:17) அதாவது, கிறிஸ்துவுக்குள் வருவதும், புது சிருஷ்டியாவதும் ஒரு சேர நடக்கும் செயலாக உள்ளது. புது சிருஷ்டியாவது குறித்து பவுல், ரோமாபுரியாருக்கு எங்ஙனம் கூறுகிறார் பாருங்கள். மேலும், பிதாவின் மகிமையினாலே, கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் *புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து* கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்துக்குள் ளாக்கும் *ஞானஸ்நானத்தினாலே* கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப் பட்டோம் என்று (ரோம. 6:4) இங்கே, *புதிய ஜீவன்* என்பதும், *புது சிருஷ்டி* என்பதும் ஒன்றுதான் என்பதை நாம் விளங்கிக் கொள்வதற்குப் பெரிய மேதாவித்தனம் எதுவும் தேவையில்லை. இவ்விரண்டும் ஞானஸ்நானத்தினாலே உண்டாகிறது.

அதாவது, பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் முழுகி எடுக்கும் ஞானஸ்நானமானது ஒருவனைக் கிறிஸ்துவுக்குள்ளாக வும் கிறிஸ்துவின் சபைக்குள்ளாகவும் கொண்டு வருகிறது. இந்த ஞானஸ்நானம் பற்றி அப்போஸ்தலன் பவுல் கலாத்தியருக்குச் சொல்லும்போது, ஏனெனில், *உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே* என்கிறார். (கலா 3;27) ஞானஸ்நானம் ஒருவனைப் பாவங்களிலிருந்து இரட்சித்து கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது. *இரட்சிக்கப்படுகிறவர்*

களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார். (அப். 2:47) என்ற வசனத்தின்படி, ஞானஸ்நானத்தின் மூலம் கிடைக்கும் இரட்சிப்பு ஒருவனை கிறிஸ்து கட்டின சபைக்குள் கொண்டு வருகிறது. இதுபற்றி பவுலாடியார் இன்னும் கூட விளக்கமாக 1 கொரி. 12:13-ல் கூறியுள்ளார். நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக (சபைக்குள்ளாக) ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம் என்று.

கிறிஸ்து கட்டின அந்த ஒரு சபைக்குள் தான் நித்திய இரட்சிப்பும் கிறிஸ்துவின் சபைக்குள் தான் உண்டு. எப்படியெனில், பவுல் அப்போஸ்தலன், கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்குச் சொல்லும்போது, அதன் பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார் (1 கொரி. 15:24) என்றுள்ளது. ஆம், ஒருநாளில், அந்த மகத்தான நாளில், இயேசு ராஜ்யமாகிய சபைக்குள், யாரெல்லாம் இருக்கிறார்களோ அவர்கள் மாத்திரமே, பிதாவினிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டு நித்திய வீட்டிற்குள் பிரவேசிப்பார்கள்.

இங்கே, கிறிஸ்துவின் சபை, கிறிஸ்துவின் சபை என்று அழுத்திச் சொல்லும்போது, ஏன் இப்படி இவர்கள் அடித்துக் கொள்கிறார்கள், வேறு சபைக்குள்ளாக இருந்தால் பாதுகாப்பும், நித்திய இரட்சிப்பும் கிடையாதா என்று நீங்கள் கேட்கக்கூடும். நியாயந்தான் நமது அறிவைக் கொண்டு பார்த்தால், எங்கிருப்பவர்களையும் இரட்சிக்க தேவனால் முடியும் தான். ஆனாலும், தேவன், இதுதான் இரட்சிப்புக்கான வழி என்று ஒன்றைச் சொல்லிவிட்டால், நாம் அதைத்தான் செய்தாக வேண்டும். இதை சீரணிப்பதற்குக் கொஞ்சம் சிரமமாகத்தானிருக்கும். ஆனால், வேறு வழியில்லை. சொல்லுகிறவர் தேவன். அவர் சொல்லியபடியே பேழைக்கு வெளியே யாரும் காப்பாற்றப்படவில்லையென்பதையும், வீட்டிற்கு வெளியே இருந்தவர்கள் யாரும் தப்பிக்கவில்லையென்பதையும் மறந்துவிடாதீர்கள். கிறிஸ்துவின் நாமத்தால் தான் இரட்சிப்பு, கிறிஸ்துவின் சபைக்குள் தான் பாதுகாப்பு என்று கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசம் சொல்லும்போது, அதை அப்படியே ஏற்றுச் செய்ய வேண்டியது நமது கடமை. அப்படிச் செய்தால் தான், நாம் நித்திய அழிவிலிருந்து காப்பாற்றப்பட முடியும்.

ஆகையால், இப்பேருண்மையை உணர்ந்து, நீங்கள் செய்ய வேண்டியதைச் செய்ய, அதுவும் உடனே செய்ய உங்கள் ஒவ்வொருவரையும் ஊக்கப்படுத்துகிறேன் ஆமென்.

**E.Z.S. இராஜநாயகம்**

# நாம் ஏன் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம்?

1. ஒருவர் ஏதோ ஒன்றை விசுவாசித்தால் அல்லது நம்பினால் அவர் அதை நம்புவதற்கு சில காரணங்கள் இருக்க வேண்டும். இது நாங்கள் கிறிஸ்தவர்களாகவும், தேவனுடைய குடும்ப மாகிய கிறிஸ்துவின் சபையில அங்கத்தினர்களாக இருப்பதாலும், இது நிச்சயமாகவே எங்களுக்கு உண்மையாயிருக்கிறது.

2. நான் ஏற்கனவே நாங்கள் ஏன் தேவனை விசுவாசிக்கிறோம் என்பதற்கான சில காரணங்களை உங்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். இப்போது நான் உங்களிடத்தில் இயேசு கிறிஸ்துவை ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நங்கள் ஏன் விசுவாசிக்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன்.

3. முதலாவதாக, இயேசு நம்மைப்போல ஒரு சாதாரண மனிதன் அல்ல என்பதை நான் உங்களுக்கு விளக்க ஆசைப்படுகிறேன். அவர் ஒரு கள்ளப் போதகரும் அல்ல. அவர் மறுபடியும் மரிப்பதற்காக மரிக்கவில்லை. இரண்டாவது, கிறிஸ்து ஆதியிலிருந்து தேவனோடு இருந்தபோதிலும் (ஆதியாகமம் 1:1) அவர் மூலமாய் சகலமும் உண்டான போதிலும் (யோவான் 1:1-3) அவர் பிதாவாக பேசப்படவில்லை. ஆனால், அவர் தேவனுடைய குமாரனாக பேசப்பட்டிருக்கிறார். (ரோமர் 1:20; அப். 17:39; கொலோ 2:9) ஆகிய வசனங்களில் அழைக்கப்படுகிற தேவத்துவத்தில் மூன்று வேறுபட்ட ஆள்த்துவங்கள் இருக்கிறது என்பதை தயவு செய்து மனிதில் வைத்துக்கொள்ளுங்கள்; பிதாவாகிய தேவன், குமாரனாகிய கிறிஸ்து, தேவ வார்த்தைகளைத் தந்த பரிசுத்த ஆவியானவர் அல்லது வேத வாக்கியங்களின் ஆசிரியரான பரிசுத்த ஆவியானவர் (எபேசியர் 4:1-6). மறுபடியும், வேத வாக்கியங்கள் ஒரே தேவனைப்பற்றியும், மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்பதைப்பற்றியும் 1 தீமோத்தேயு 2:5 மற்றும் யோவான் 17 ஆம் அதிகாரத்தில் பேசுகிறது. சிலர் இது புரிந்துகொள்வதற்கு கடினமானதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதை விளக்கும் முயற்சியில் நாம் இறங்கும் போது சிலர் இயேசு தேவன் என்றும், அதே இயேசு பரிசுத்த ஆவியானவர் என்றும் சொல்கிறார்கள். ஆனால், மறுபடியும், மறுபடியும் வேதவாக்கியங்கள் மூவரையும் வித்தியாசமான ஆள்த்துவங்களை உடையவர்களாகவே காட்டுகிறது. ஒருவரோடு ஒருவர் பேசுவதையும், ஒருவரோடு ஒருவர் இணைந்து செயல்படுவதையும் நாம் வேத வசனங்களில் பார்க்க முடியும் (மத்தேயு 17:5) (யோவான் 16:13). இன்னும் சிலர் கிறிஸ்து தேவனுடைய குமாரனாயிருந்தால் தேவனுக்கு திருமணம் ஆகியிருக்க வேண்டும் என்றும் வாதாடுகிறார்கள். இந்த காரியத்தில் அவர்கள் மனிதப்பண்புகள் மற்றும் விதிகளை தேவத்துவத்தோடு பொருத்தப்பார்க்கிறார்கள். எனவே, இது வேலை செய்யாது. கிறிஸ்து குமாரனாக பேசப்பட்டிருக்கும்போது அவர் ஆதியில்

தேவனோடிருந்தார், தேவனுக்கு சமமாக இருந்தார், ஆனால், இந்த உலகத்திற்கு வருவதற்கு தம்மை முற்றிலுமாக தாழ்த்தினார். அதுமாத்திரமல்ல, ஒரு ஸ்திரீயினிடத்தில் பிறப்பதற்கும், மனிதன் இரட்சிப்படைந்து, நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கும் நம்முடைய பாவங்களுக்காக மரிக்கும் அளவிற்கு தம்மைத் தாழ்த்தினார். தேவத்துவத்தை நாம் முழுமையாக புரிந்துகொள்ளாவிட்டாலும், இத்தகைய காரியங்களைக் குறித்து நமக்கு முழுமையான அறிவு இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. தேவன் எப்படி எப்போதும் சதாகாலமும், இருந்திருக்க முடியும் என்றென்றும் இருக்க முடியும் என்பதை மனிதர்களாகிய நாம் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், விசுவாசத்தினாலே நாம் அதை ஏற்றுக் கொள்கிறோம். இதே கருத்து கிறிஸ்து தேவனுடைய குமாரனாயிருக்கிறார் என்பதோடும் உண்மையாகிறது.

4. தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவை நாங்கள் ஏன் விசுவாசிக்கிறோம் என்பதற்கான காரணங்களையும், மனிதனுடைய இரட்சகராயிருப்பதற்காக உயிர்தெழுந்த கர்த்தர் பிதா இருக்கிற பரலோகத்திற்கு திரும்பிச் சென்றதற்கான காரணங்களையும் உங்களுக்குத் தர விரும்புகிறேன். அதன் பொருள் என்னவென்றால் நாம் கிறிஸ்துவை ஒரு தீர்க்கதரிசியை விட மாபெரும் போதகர் என்பதை விட மேலாக பார்க்க வேண்டும். ஏனென்றால், அவர் தான் நம்மில் அன்பு கூர்ந்து நாம் இந்த உலகத்தில் இரட்சிக்கப்படவும், வருகின்ற உலகத்தில் இரட்சிக்கப்படவும் நமக்காக மரிக்க முன்வந்தார்.

5. அவர் எப்போதும் இருக்கிறபடியால் நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம். ஆதியாகமம் 1:1ன் படி இயேசு ஆதியிலே தேவனோடிருந்தார். கிறிஸ்துவைப் பற்றி பேசும் போது அவரைப் பற்றி யோவான் 1:12ல் நாம் இப்படியாக வாசிக்கிறோம். ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.

6. கிறிஸ்து மூலமாய் அவராலே எல்லாம் உண்டாக்கப்பட்டபடியினாலே நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம். ஆதியாகமம் 1:1ல் பேசப்பட்டிருக்கிற சிருஷ்டிப்பில் கிறிஸ்து ஈடுபடுத்தப்பட்டிருந்தார். ஆதியாகமம் 1:26,27 வசனங்களில் மனித சிருஷ்டிப்பில் அவர் ஈடுபட்டிருந்தார். யோவான் 1:3ல் நமக்கு இப்படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அதன் பொருள் நம்மைச் சுற்றிலும் இருக்கிறவைகளை நாம் பார்க்கும்போது இவைகள் எல்லாம் எங்கிருந்தோ வந்தது என முடிவுக்கு வரவேண்டும். ஆனால், இவைகள் எல்லாம் எங்கேயிருந்து வந்தது? இவைகளெல்லாம் சிருஷ்டிக்கப்பட்டது என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. யாரால் சிருஷ்டிக்கப்பட்டது? கிறிஸ்துவால் அது உண்மையாக இருக்குமானால் நம்மைப் பற்றி எல்லாக் காரியங்களை பார்க்கும் போது, நம்மைப் பற்றி ஆழ்ந்து யோசிக்கும் போதும், கிறிஸ்துவைப் பற்றி நாம்

நினைப்பூட்டப்படுகிறோம். நம்மால் எப்படி அவரை விசுவாசிக்க தவற முடியும்? பவுல் கிறிஸ்து வைப் பற்றி இப்படியாக எழுதினார் (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தி னாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ் டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால், அவருக்குள் சகல மும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களா னாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும், அவருக் கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தின வர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது (கொலோசெயர் 1:14-17).

ஐந்தாவதாக, நீங்கள் நீதிமான்களின் ஆவிகளிடத்தில் வந்து சேர்ந்துள்ளீர்கள்! யார் இந்த நீதிமான்களின் ஆவிகள்? எபிரெயர் 11ம் அதிகாரம் முழுவதிலும் குறிப்பிட்டுள்ள ஆபேல், நோவா, ஆபிரகாம் முதற்கொண்டு தாவீது, சிம்சோன் மற்றும் கிறிஸ்து வுக்காக மரித்த அநேக ரத்தசாட்சிகளையும் இது குறிப்பிடுகிறது. அவர்கள் நம்மையல்லாமல் பூரணராக முடியாது என்று ஆசீர் வாதம் நமக்குண்டு (எபி. 11:39,40).

7. நாங்கள் ஏன் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம் என்றால் அவர் வருவார் என தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்தது, அந்த தீர்க்கதரிசனங்கள் எல்லாம் அவர் வருகையோடு நிறைவேறி யது. ஏதேன் தோட்டத்தில் மனிதனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு, தேவன் மனிதனை அந்நியனாக்கியபோது கிறிஸ்து மனிதனை இரட்சிக்க வருவார் என்று சொல்லப்பட்டது (ஆதியாகமம் 3:15). தீர்க்கதரிசிகள் மேசியாவின் வருகையைப் பற்றி அடிக்கடி பேசி யிருக்கிறார்கள். உண்மையான விஷயமாகப் பார்த்தால் அவரு டைய வருகையைப் பற்றி அநேக காரியங்களை அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அவர் எங்கே பிறப்பார், ராஜாவின் கோபத்திற்கு தப்பித்துக்கொள்ள அவர் எகிப்துக்கு எப்படி கொண்டு செல்லப்படுவார், தன்னுடையவர்களில் ஒருவரால் அவர் எப்படி காட்டிக்கொடுக்கப்படுவார், பொய்யான விசாரணை நடைபெறும், அவர் சிலுவையிலறையப்பட்டு, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுவார் கடைசியாக பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்தில் திரும்புவார் போன்ற வற்றைப் பற்றி தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தார்கள். உதாரண மாக, ஏசாயா 53 ஆம் அதிகாரம் கிறிஸ்துவைப் பற்றி பேசுகிறது அப் 8 ஆம் அதிகாரத்தில் இதே பழைய ஏற்பாட்டு வசனப்பகுதி யிலிருந்து கிறிஸ்துவைப்பற்றி எத்தியோப்பியாவிலிருந்து வந்த ஒரு மனிதனுக்கு பிலிப்பு போதித்ததாக நாம் வாசிக்கிறோம். நிச்சயமாகவே இது தற்செயலாக நடந்த ஒரு காரியம் அல்ல.

8. கிறிஸ்து அற்புதவிதமாக இந்த உலகத்தில் பிறந்தபடியால் நாங்கள் அவரை விசுவாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசி இப்படிச் சொன்னார். ஆதலால் ஆண்டவர் தாமே உங்க ளுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னி

கை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள் (ஏசாயா 7:14). அதன் நிறைவேறுதலைக் குறித்து வேத வசனம் இப்படிச் சொல்கிறது. இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது; அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில் அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான். அவன் இப்படி சிந்தித்துக் கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு; தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனென்றால், அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவன் இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்கு கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக் கொண்டு அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான் (மத்தேயு 1:18-25). அப்படியென்றால், இயேசுவுக்கு பூமிக்குரிய தகப்பன் இல்லை. அவர் பரலோகத்திலிருக்கிற தன்னுடைய பிதாவினிடத்திலிருந்து வந்தார். கிறிஸ்து மற்ற மனிதர்களைப் போல பூமிக்குரிய தகப்பனுக்கும், தாய்க்கும் பிறந்திருந்தால் மனிதனுடைய இரட்சகராக இருக்க முடியாது.

9. கிறிஸ்து தான் பிதாவினிடத்திலிருந்து வந்ததை நிரூபிப்பதற்காக அற்புத அடையாளங்களை செய்தபடியால் அவரை விசுவாசிக்கிறோம். அவர் வியாதியஸ்தர்களை சொஸ்தப்படுத்தினார், குருடர்களுக்கு பார்வை கொடுத்தார், செவிடர் கேட்கும்படி செய்தார், ஊமை பேசும்படி செய்தார், நொண்டியை நடக்கச் செய்தார். அவர் திருமண விருந்தில் தண்ணீரை திராட்ச ரசமாக்கினார், கொந்தளித்த கடலை அமைதிப்படுத்தினார், தண்ணீரில் நடந்தார், மரித்தோரை உயிரோடு எழுப்பினார். புதிய ஏற்பாட்டின் மத்தேயு, மாற்கு, லூக்கா யோவான் புத்தகங்கள் இந்த அற்புதங்களை பதிவு செய்திருக்கின்றன. நாம் இப்படியாக வாசிக்கிறோம்

பாஸ்கா பண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள், (யோவான் 2:23). யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு இயேசுவைப் பார்த்து இப்படியாகச் சொன்னான். ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன்

இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான் (யோவான் 3:2). கடைசியாக நாம் இப்படி வாசிக்கிறோம். இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவான் 20:30,31).

10. தேவன் அப்போஸ்தலர்கள் மற்றும் அவருடைய சத்துருக்கள் பிசாசுகள் கூட அவரை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்திருக்கிறபடியால் கிறிஸ்துவை நாங்கள் விசுவாசிக்கிறோம். கிறிஸ்து மறுரூபமான பிறகு தேவன் வானத்திலிருந்து இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று சொன்னார் (மத்தேயு 17:5). மற்றுமொரு சூழ்நிலையில் பேதுருவும், அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்தார்கள் (மத்தேயு 16:16-18). நிச்சயமாகவே, அவர்களும் மற்றவர்களும் இப்படிச் செய்வதற்கு நல்ல காரணம் இருந்தது.

11. கிறிஸ்து பாவமற்ற வாழ்க்கையை வாழ்ந்து, மனிதன் இரட்சிக்கபடும்படி மரித்து, கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தபடியால் நாங்கள் அவரை விசுவாசிக்கிறோம். 1பேதுரு 2:22ல் அவர் பாவஞ் செய்யவில்லை என்று பேதுரு சொன்னார். பவுல் சொல்லும் போது நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் (ரோமர் 5:8). ஆனால், மன்னிப்பை நமக்கு உறுதிப்படுத்தும்படி நம்முடைய இரட்சகராகும்படியும், நித்திய ஜீவனின் நம் நம்பிக்கையாயிருக்கும்படியும் கிறிஸ்து கல்லறையை ஜெயித்து எழுந்தார் (1கொரிந்தியர் 15:1-4).

12. நீங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறீர்களா? அவர் தேவனுடைய குமாரன் என்பதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நாம் தேவனிடத்தில் விசுவாசமாயிருந்தால் நாம் கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசமாயிருக்க வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார் (யோவான் 14:1). கிறிஸ்து இப்படியாகச் சொன்னார். “ மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்” (மத்தேயு 10:32). எனவே, நம்முடைய இரட்சிப்பு கிறிஸ்துவின் பேரில் நாம் வைத்திருக்கிற விசுவாசத்தை சார்ந்திருக்கிறது.

13. நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்து, பாவமன்னிப்புக்கென்று முழுக்கு ஞானஸ்நானம் பெறவேண்டும் என நான் உங்களை உற்சாகபடுத்துகிறேன். இப்படி நீங்கள் செய்தால் கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்ளுவார் (மாற்கு 16:16; அப். 2:47).

J.C. CHOATE

J.C. CHOATE

பெண்கள் பகுதி

# நன்றியில்லாமையை மேற்கொள்வது

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு வாழ்த்துதல்களை கூறிக் கொள்ளுகிறேன். முழுமையான கிறிஸ்தவர்களாக நாம் இருந் தால்தான் பரலோகத்தை பெற்றுக்கொள்ள முடியும். முழுமை யானது என்றால் என்ன? வேதாகமம் நம்மை செய்யும்படி சொல்லி யிருக்கின்ற யாவையின் படியும் செய்வது.

தேவன் நமக்கு செய்திருக்கின்ற யாவற்றிற்காகவும் நாம் முதலாவது நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனால், பல சமயங்களில், ஏன் சொல்லப்போனால் எல்லா சமயங்களிலும் நாம் நன்றியில்லாதவர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதை எவ்வாறு மேற்கொள்வது? வழக்கம்போல வேதத்திற்குள் ளே சென்று வேதாகமம் என்ன சொல்லுகிறது என்று இம்மாதம் படிப்போம்.

கிறிஸ்தவ நாள்காட்டியில் ஒவ்வொரு நாளும் நன்றி செலுத்தும் நாளாகவே இருக்க வேண்டும். நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று கட்டளை பெற்றிருக்கிறோம். *ஸ்தோத்தி ரத்தோடே அதிலே பெருவீர்களாக* (கொலோ 2:7) *நன்றியறித லுள்ளவர்களாயுமிருங்கள்* (கொலோ 3:15). *ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்* (4:2) *எப்பொழுதும் எல்லாவற்றிற் காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து* (எபே. 5:20). ஸ்தோத்திரம் செய்வதே உங்களைக் குறித்து தேவனுடைய சித்த மாயிருக்கிறது (1தெச. 5:18). தேவனுடைய சித்தத்தின்படி செய் தால்தான் பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியும் (மத். 7:21). எனவே, நன்றியுள்ளவர்களாய் இருப்பதென்பது ஏதோ இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி என்ற ஒன்றல்ல. நன்றி யில்லாத குணம், கீழ்ப்படியாத குணத்திற்கு தள்ளிவிடுகிறது. கீழ்ப்படியாமை ஒருவனை இழந்துபோகச் செய்கிறது. வேதாக மத்தில் நன்றியுடன் வாழ்ந்தவர்களைப் பற்றிய உதாரணங்களை நாம் பார்க்க முடியும். நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து அப்படியிருந்தார் (மத். 11:25;26:27; மாற்கு 8:6; யோவான் 11:41). அவர் தான் நமக்கு முன்மாதிரியாயிருந்தார். (1பேதுரு 2:21,22). இன்னும் தாவீது (1நாளா. 16:7-36; சங். 100), தானியேல் (தானி 6:10), அன்னாள் (லூக்கா 2:38), அப். பவுல் (அப். 27:35; 28:15; பிலி.1:3; 4:6) போன்றவர்கள் நன்றியுள்ள இருதயத்தை பெற்றிருந்தார்கள் என்று வாசிக்கிறோம். மேலும், தேவ தூதர்களும் தேவனுக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுத்தார்கள் (வெளி. 7:11,12). இந்த சம்பவங்களையெல்லாம் பார்க்கும்போது நன்றியில்லாத தன்மையை எப்படியாவது மேற் கொள்ள வேண்டும், நேரடியாக சொன்னால் எப்படி நன்றியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை நாம் கற்றுக் கொள்கிறோம்.

## இன்னும் சில வேத ஆதாரங்களை கீழே காண்போம்.

### I எப்போதும் மறக்ககூடாதென்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே (சங். 103:2). மறதி என்பது நன்றியறிதலுக்கு விரோதி. ஆனாலும், பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்து விட்டான் (ஆதி. 40:23). சுத்தமான பத்து பேரில் ஒரு குஷ்டரோகிதான் மறவாமல் நன்றி சொல்ல இயேசுவிடம் வந்தான் (லூக்கா 17:11-19).

### II நம்முடைய பிரச்சனைகளையே முக்கியப்படுத்திக் கொண்டிருக்க கூடாது

நன்மைகளை எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு பக்தன் தன் வீட்டில் கொள்ளை (திருட்டு) நடந்தபோது இப்படியாக கூறினார். முதலாவது நான் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன் ஏனென்றால் இதுதான் முதல்முறையாக நடந்த திருட்டு. இதற்கு முந்தி நடந்ததில்லை. இரண்டாவது, என்னுடைய பணப்பை யைத் தான் திருடிச் சென்றான் என் உயிரை எடுக்கவில்லை, மூன்றாவது, ஏறக்குறைய என்னுடையவைகள் யாவையும் எடுத்துக்கொண்டாலும் இது அவ்வளவு அதிகமல்ல, நான்கா வது, நான்தான் திருடப்பட்டேன், நான் திருடவில்லை. அருமை யானவர்களே கிறிஸ்தவர்களாகிய நாம் நம் பிரச்சனை நேரங்க ளில் இப்படி நன்றி செலுத்துகிறோமா? நான் நினைக்கிறேன் அவர் ரோமர் 8:28ல் அதீத நம்பிக்கை வைத்திருந்திருப்பார் என்று. அன்றியும் *அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கி றோம்.*

### II நம்மிடத்தில் இல்லாததை பெரிதுபடுத்தாமல் இருக்கிற ஆசீர்வாதங்களை எண்ணிப்பார்க்க வேண்டும்.

உண்ணவும், உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம் (1தீமோ. 6:8). உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள் (எபி. 13:5). ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை (எபே. 1:3) எண்ணிப் பார்க்க வேண்டும். தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து, ஒப்பிட முடியாத தனித்தன்மையான சபை, பரிசுத்த வேதாகமம், மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள், மறுமையின் நம்பிக்கை, நம்முடைய மனமாற்றம், இப்படி ஏராளமானவை களை சொல்லிக்கொண்டே போகலாம். இன்னும் சரீரப்பிரகார மான ஆசீர்வாதங்களான நம்முடைய குடும்பம், நம் சுகம், நாம் உண்ணும் உணவு, இருப்பிடம், உடை, நம் சுதந்திரம், நம்மை சுற்றியுள்ள இயற்கை நிலைகள் போன்றவைகளை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நன்றியறியாமையை தேவன் எவ்வாறு கண்டிக்கிறார் தெரியுமா? *அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவ னென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது* (ரோமர் 1:21).

**IV நன்றியை தெரிவிக்க வேண்டும் :**

வாயினால் நன்றியை வெளியில் தெரியும்படி சொல்ல வேண்டும். 1தெச. 5:18; எபே. 5:20ன்படி ஸ்தோத்திரம் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம். நன்றியை நினைத்துப் பார்க்கவோ, சிந்தனை பண்ணு என்றோ அல்ல. வாயினால் சொல்ல வேண்டும். தேவன் நமக்கு செய்த நன்மைகளுக்கு நம் வாழ்க்கை மூலமாகவும், உதடுகள் மூலமாகவும் நன்றி சொல்ல வேண்டும். நன்றிக் கடனாக ஒருவருக்கு ஒன்றை செய்வதைக் காட்டிலும் நன்றியாக வாழ்வதே சிறந்தது. *கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்?* (சங். 116:12) என்ற தாவீதின் கேள்விக்கு பதில் சொல்லும் வண்ணமாக நாம் நம் தேவனுக்கு நம் அன்பையும், நம் நேரத்தையும், நம் திறமைகளையும், நம் பணத்தையும், நம் வாழ்க்கையையும் ஆம் நம் எல்லாவற்றையும் கொடுப்போம்.

**V முறுமுறுத்தல், குற்றம் சொல்லுதல் இவைகளை விட்டு ஒழிப்போம்.**

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த தங்களை விடுதலையாக்கி வந்ததற்கு ஓயாமல் நன்றி சொல்ல வேண்டிய இஸ்ரவேல் மக்கள் முறுமுறுக்க ஆரம்பித்தார்கள். (யாத். 15:24;17:3; எண். 14:2). 1கொரி. 10:10ல் பார்க்கிறபடி அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள். அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள். என்று எச்சரிப்பை பெறுகிறோம். அப். பவுல் சிறையில் இருக்கும் போது *எப்பொழுதும், எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து* (எபே. 5:20) என்று சொல்லுகிறார். பிரியமானவர்களே! நம்மை நிதானித்துப் பார்ப்போம். சோர்வு, பிரச்சனை நேரங்களில் என்ன செய்கிறோம்? பவுல் சொன்னபடி ஸ்தோத்திரிக்கிறோமா? வேதம் வாசிக்காமல், ஜெபமும் செய்யாமல் முடங்கிவிடுகிறோமா? எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும், தர்க்கிப்பில்லாமலும் செய்ய (பிலி. 2:16) பழகிக் கொள்ள வேண்டும்.

**VI. நாம் பெற்றுக் கொள்கிறவர்கள் என்பதை உணர வேண்டும். நமக்கு ஈவுகளை கொடுக்கும் கொடுப்பவரை ஒருபோதும் மறக்ககூடாது.**

நமக்கு உண்டானதெல்லாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்டவைகள் (யாக். 1:17). பவுல் இந்த உண்மையை உணர்ந்திருந்தார் (1கொரி. 15:10; ரோமர் 1:5). ஆனால் இந்த பணக்கார விவசாயி இந்த உண்மையை அறிந்து கொள்ளவில்லை (லூக்கா 12:16,21). தேவனிடத்திலிருந்து கிடைக்கும் நன்மைகளை பற்றிக் கொண்டு, அவைகளில் பிரியம் வைத்து அவைகளை கொடுத்த தேவனை மறந்து விடுகிறோம். தேவனை யும், அவர் நமக்கு செய்த நன்மைகளையும் பிரித்து விடக் கூடாது. தேவனுக்கு எப்போதும் நன்றி சொல்வது நம்முடைய கடமை. கட்டாயம் செய்ய வேண்டிய ஒன்று.

பிரியமான தாய்மார்களே, சகோதரிகளே ஒருவேளை நாம் காட்டவேண்டிய அளவு நன்றியை காட்டாமல் இருந்திருப்போமானால் இனிமேல் நன்றி என்பது நாம் செய்ய வேண்டிய ஒன்று என்பதை வேத வசனங்களின் வாயிலாக தெரிந்து கொண்டோம். நாம் இனிமேல் ஜெபிக்கும்போது, தேவனே! வேண்டிய எல்லாவற்றையும் எனக்கு கொடுத்திருக்கிறீர், நன்றியுள்ள இருதயத்தை தாரும் தகப்பனே என்று ஜெபிப்போமாக! ஆமென்.

**R.R. NAYAGAM**

வாலிபர் பகுதி

# கர்த்தருடைய ஊழியத்திற்கென்று கொடு

வாலிபர்களே, உங்களை இந்தக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பிரியமானவர்களே, தேவன் நமக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்திருந்தாலும் தேவன் எனக்கு எதையுமே செய்யவில்லை என்று நன்றி கெட்டவர்களாய் அநேக வேளைகளில் நாம் அங்கலாய்த்துக் கொள்கிறோம். இந்த பூமியில் நமக்கு தேவன் உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றை கிருபையாக தந்திருக்கும் போது உயர பறக்க நினைக்கிறோம். அநேகர் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொள்வதிலேயே குறியாக இருக்கின்றனர். தேவன் நம்மீது அன்பு வைத்தபடியினால் தான் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை நமக்காக அனுப்பிக்கொடுத்தார். இயேசுவும் நம்மில் அன்பு கூர்ந்தபடியினால் தான் நமக்காக தம்முடைய ஜீவனையே விட்டார். சங்கீதக்காரன் கர்த்தர் தனக்குச் செய்த நன்மைகளை நினைத்துப்பார்த்து இப்படியாகச் சொல்கிறார். “கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்” (சங்கீதம் 116:12). இங்கே சங்கீதக்காரன் கர்த்தர் தன்னை அபரிதமாக ஆசீர்வதித்ததை உணர்ந்து பேசியிருக்கிறதை நாம் காண முடியும். சங்கீதக்காரன் அங்கேயே நின்று விடாமல் கர்த்தர் தன்னுடைய வாழ்க்கையிலே செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் தான் என்னத்தைச் செலுத்தப்போவதாக கூறுகிறார்.

நாமும் கூட தேவன் நமக்கு செய்த நன்மைகளை நினைத்து அதற்குப் பதிலாக அவருக்காக நாம் செய்யப்போகிற காரியத்தை குறிப்பாக சிந்தித்துப்பார்க்க வேண்டும். நம்முடைய முழு பலத்தோடு அவருக்கு சேவை செய்ய வேண்டும். தேவன் நமக்கு கொடுத்திருக்கிற தாலந்துகளையும், நேரத்தையும் தேவனுக்காக பயன்படுத்த வேண்டும். சுருக்கமாக சொல்லப்போனால் நம்மை முழுமையாக அவருக்கென்று அர்ப்பணிக்க வேண்டும். மேலும், சங்கீதக்காரன் சங்கீதம் 116:13ல் சொல்லும் போது கர்த்தர் தனக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளப்போவதாகக் கூறுகிறார். கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் என்பது கர்த்தருக்கு கீழ்ப்படிதல் என்று பொருள்படும். தேவன் நமக்கு செய்த நன்மைகளை நினைத்து அவருக்கு கீழ்ப்படிய வேண்டும். வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நாம் மறந்து விடக்கூடாது (அப். 20:35). எனதருமை வாலிபர்களே, தேவன் உங்களுக்கு என்னச் செய்தார் என்பதைக்காட்டிலும் நீங்கள்

தேவனுக்கு என்னச் செய்தீர்கள் என்பதை சிந்தித்துப்பாருங்கள். உங்களுக்கு உண்டானவற்றையெல்லாம் தேவனுக்குக் கொடுங்கள். வேதாகம மத்தில் தேவனுக்கென்று அவருடைய ஊழியத்திற்கென்று கொடுத்தவர் கள் எந்த ஒரு நிலையிலும் குறைவுபட்டதே இல்லை. எப்படி மண்ணைத் தோண்ட தோண்ட தண்ணீரின் அளவு பெருகுமோ அதேப்போல நாம் கர்த்தருடைய ஊழியத்திற்கென்று கொடுக்க கொடுக்க கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கும் அளவும் பெருகும். கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும் என்பதை நாம் நம் வாழ்க்கையில் அனுபவித்துப் பார்க்க கர்த்தருக்கென்று கொடுக்க வேண்டும். இப்போது நாம் முதலில் தன்னையும், இரண்டாவது தனக்கு உண்டான எல்லாவற்றையும் கர்த்தருக்குக் கொடுத்த பர்னபாவிடமிருந்து சில பாடங்களை நாம் கற்றுக் கொள்ளலாம்.

## I நிலத்தை விற்று கர்த்தருக்குக் கொடுத்தான்

ஆதி திருச்சபையின் விசுவாசிகள் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ள வைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை சகல மும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. உடனே நீங்கள் ஆதிக் கிறிஸ்தவர்கள் கம்யூனிசக் கொள்கையை பின்பற்றினார்கள் என்று நினைத்துவிட வேண்டாம். அவர்கள் ஒருவருக்கொருவர் அன்பாயிருந்தபடியால் மற்றவர்களுடைய தேவைகள் சந்திக்கப் பட வீடுகளையும், நிலங்களையும் உடையவர்கள் அவைகளை விற்று விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அதை அப்போஸ்தலர்கள் சபையாரில் தேவையில் இருந்தவர்களுக்கு பகிர்ந்து கொடுத்தார்கள், இதனிமித்தம் ஒருவருக்கும் ஒன்றும் குறைவுபடவில்லை. அந்த முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் உண்மையான அக்கறை உடையவர்களாயி ருந்திருக்கிறார்கள். தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடை யான் என்று நீதிமொழிகள் 28:27ல் சொல்லப்பட்டிருக்கிறவை களை சபையார் சபை ஆரம்பிக்கப்பட்ட நாட்களிலேயே செயல் படுத்தியிருக்கிறார்கள். ஆனால், சபை ஸ்தாபிக்கப்பட்டு இருபது நூற்றாண்டுகள் உருண்டோடிய பின்னும் இந்த இருபத்தொன் றாம் நூற்றாண்டில் கிறிஸ்துவர்கள் ஒருவருக்கொருவர் அக்கறை இல்லாமலும், உதவிச் செய்யும் மனப்பான்மையும் ஒட்டுமொத்த மாக ஐக்கியம் இல்லாமலும் இருப்பது இவர்களும் கிறிஸ்தவர் கள்தானா என்கின்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது.

சரி, நாம் மறுபடியும் முதல் நூற்றாண்டிற்கே திரும்பிச் செல்வோம். கிறிஸ்துவை நம்பி, தனக்கு உண்டானவைகளை எல்லாம் பொதுவிலே வைத்து, புத்துணர்ச்சியுடன் புதுபொலிவு பெற்று சபையை சீராட்டி, பாராட்டி வளர்த்து வந்த சீஷர்களில் ஒருவனாகத்தான் நாம் பார்க்கப்போகிற பர்னபா என்னும் மறுபேர் பெற்றவனுமாகிய யோசே இருந்தான். இந்த யோசேக்கு அப்போஸ்தலர்கள் தான் ஆறுதலின் மகன் என்று அர்த்தங்

கொள்ளும் பர்னபா என்னும் பெயரை வைத்தார்கள். அவர்கள் இந்தப் பெயரை யோசேக்கு வைத்தது எவ்வளவுப் பொருத்த மானது என்று நாம் பின்பு உணர்ந்து கொள்வோம். முதலாவது இந்த பர்னபா ஒரு லேவியனாய் இருந்திருக்கிறான் (அப். 4:36). லேவி கோத்திரத்தை தேவன் தம்முடைய ஆசாரிய ஊழியத்தைச் செய்யும்படியாகத் தெரிந்தெடுத்திருந்தார் (எண்ணாகமம் 3:9-13). லேவியர்களுக்கென்று பரிசுத்த நியமித்தில் பங்கொன்று மில்லை என்று (எண்ணாகமம் 18:20-24) வசனங்களில் பார்க்கி றோம். அப்படியிருக்கும் போது லேவியனான பர்னபாவுக்கு நிலம் எங்கே இருந்து வந்தது? என்ன காதில் பூசுற்றுகிறீர்களா என்கிறீர்களா? பர்னபாவின் சொந்த ஊர் சீப்புருத்தீவு என்று அப். 4:36-ல் நாம் பார்க்கிறோம். எனவே, தன்னுடைய சொந்த ஊரிலே பர்னபாவுக்கு சொந்த நிலம் இருந்திருக்க வேண்டும், அதை விற்றுதான் பர்னபா அப்போஸ்தலர்களிடம் கொடுத்திருக் கிறான். மண்ணுக்காக பொன்னுக்காக சண்டையிட்டுக் கொண்டி ருக்கின்ற இந்த நாட்களில் தன்னுடைய சொந்த நிலத்தை விற்று சபையாருக்கு உதவியிருக்கும் இந்த பர்னபா வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழமாய் திகழ்கிறான்.

## II தன்னலமில்லாமல் கர்த்தருக்குக் கொடுத்தான்

பர்னபா எருசலேம் சபையார் மீது தனக்கிருந்த தணியாத நேசத்தின் நிமித்தம் தனக்கு உண்டாயிருந்த நிலத்தை விற்று, அதில் தனக்கென்று ஒன்றையும் வைத்துக் கொள்ளாமல் அதின் கிரயத்தைக் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். இன்று சமுதாய சீர்திருத்த நடவடிக்கைகளில் ஈடுபடு பவர்கள், சமூக சேவை செய்பவர்கள் தங்கள் நிலங்களை விற்று பிறருக்கென்று உதவி செய்வதை அரிதாகத்தான் காண முடியும். ஆயினும் சொந்த நிலங்களை விற்று சபையாருக்காக கொடுப்ப தை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? இப்படி உதாரத்துவமாய் பர்னபா கொடுத்ததினால் எந்த வகையிலும் அவன் குறைந்து போக வில்லை. தேவன் பர்னபாவை மிக வல்லமையாக எடுத்து ஊழியத்தில் பயன்படுத்தியிருக்கிறார். சொல்லப்போனால் பவுல் மனமாற்றமடைந்து மூன்று வருடங்க ளுக்குப்பிறகு எருசலேமுக்கு வந்து அங்கிருந்த கிறிஸ்தவர்க ளோடு தன்னைச் சேர்த்துக் கொள்ள முயற்சித்த போது இந்த பர்னபா தான் பவுலை மற்ற அப்போஸ்தலர்களிடம் அறிமுகம் செய்து வைத்தான் (அப். 9:26,27). சவுல் தேவனுக்கு விரோத மாக செயல்பட்டபடியினால் பர்னபா சவுலை வெறுக்காமல் சவுல் மனந்திரும்பியதை நம்பி, மன்னித்து தேவனுடைய ஊழியத்தில் அவரை பங்கு பெறச் செய்யும் தன்னலமற்றத் தன்மையை பர்னபா பெற்றிருந்தான். ஊழியத்தின் பாதையில் மற்றவர்களையும் முன்னேற்றும் முனைப்புடையவனாக பர்னபா திகழ்ந்திருக்கிறான். அதோடு கூட பர்னபாவின் ஊழிய வாஞ்சை யை கண்டறிந்த எருசலேம் சபையார் அந்தியோகியா பட்டணத்தில் அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி கர்த்தரிடத்தில் திரும்பினதை

கேள்விப்பட்டு பர்னபாவை அந்தியோகியா சபைக்கு அனுப்பி வைத்தார்கள். பர்னபா அங்கே போய்ச் சேர்ந்து தேவனு டைய கிருபையைக் கண்டபோது, சந்தோஷப்பட்டு, கர்த்தரிடத் தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி எல்லோருக்கும் புத்தி சொன்னான் (அப். 11:21-23).

இந்த பர்னபா மத்தேயு 19 ஆம் அதிகாரத்தில் நாம் காணும் அந்த பணக்கார வாலிபனிடமிருந்து முற்றிலுமாக வேறுபடு கிறான். ஏனென்றால், அந்த வாலிபன் எத்தனையோ நற்குணங் களைப் பெற்றிருந்தாலும் இயேசு அவனைப்பார்த்து உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு என்று சொன்ன போது துக்கமடைந்தவனாய்ப் போய் விட்டான் என்று பார்க்கி றோம். ஆனால், பர்னபா தன்னிடம் அப்போஸ்தலர்களிடம் எதுவும் கேட்காத போதே தானாகவே முன்வந்து தன்னுடைய நிலத்தை விற்று அதை சந்தோஷமாக எருசலேம் சபையாருக்கு பகிர்ந்து கொடுத்தது "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்" என்று நீதிமொழிகள் 19:17ல் சொல்லப் பட்டிருப்பதை நமக்கு நினைவுப்படுத்துகிறது. எனவே, பிரிய மான வாலிப சகோதர, சகோதரிகளே நாம் கர்த்தருடைய பிள்ளைகளுக்கும், கர்த்தருடைய ஊழியத்திற்கென்றும் உற்சாக மாய்க் கொடுக்கும் போது உங்களை ஆராயந்தறியும் தேவன் நம்மை அபரிதமாக ஆசீர்வதிப்பாராக!.

**பென்னி மார்ட்டின்**

## சபைக்கு வேதாகமம் கூறும் பிற பெயர்கள்

1. தேவனுடைய ஆலயம் - I கொரி. 3:6
2. கிறிஸ்துவின் மணவாட்டி - எபே. 5:22,23
3. கிறிஸ்துவின் சரீரம் - கொலோ. 1:18,24
4. தேவ குமாரனுடைய ராஜ்ஜியம் - கொலோ. 1:13
5. தேவனுடைய வீடு - I தீமோ. 3:15
6. தேவனுடைய சபை - I கொரி. 1:2
7. முதற்பேறானவரின் சபை - எபி. 12:23
8. கிறிஸ்துவின் சபை - ரோமர். 16:16.



சிறுவர் பகுதி

# இயேசு, லாசருவை மரணத்திலிருந்து எழுப்பினார்

அன்புள்ள சிறு தம்பி ! தங்கைகளே, நமது ஆத்தும நேசர் இவ்வுலகில் இருந்தபோது நம்மைப் போன்ற சிறு பிள்ளைகளை நேசித்ததைப் போலவே, லாசரு என்ற மனிதனையும் சிநேகித்தார். இம்மாதம் இயேசு அவனுக்குச் செய்த மிகப்பெரிய அற்புதத்தை என்னோடு சேர்ந்து கவனியுங்கள்.

இயேசு இப்பூமியிலிருந்த போது ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பயணம் செய்து, பிரசங்கிக்கவும். ஜனங்களுக்கு நன்மை செய்து கொண்டுமிருந்தபடியால், தன்னுடைய உணவுக்கும், உறைவிடத்துக்கும், ஜனங்களின் தயவை அவர் சார்ந்திருக்க வேண்டியிருந்தது. அப்படி அவர் அடிக்கடி தங்கி, இளைப்பாறின ஒரு கிராமம் தான் பெத்தானியா. மார்த்தாள், மரியாள், லாசரு போன்றவர்கள் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள். "மார்த்தாள் அவரைத் தன் வீட்டிலே, ஏற்றுக் கொண்டதாக வசனம் கூறுகிறது" (லூக். 10:38-39)

பெத்தானியா என்பது, எருசலேமிலிருந்து எரிகோ செல்லும் வழியில், எருசலேமுக்குக் கிழக்கே, இரண்டு மைல் தொலைவில் ஒலிவ மலைக்கு அருகில் இருந்த ஒரு சிறிய கிராமம். இன்றைக்கும் இது ஒரு சிறிய, ஏழ்மை நிறைந்த கிராமமாக உள்ளது. இதைச் சுற்றிலும், ஒலிவ மரங்களும், அத்தி மரங்களும், மாதுளை மரங்களும் வளர்ந்துள்ளன.

லாசரு, மிகுந்த வியாதிப்பட்டதினாலே, அவனுடைய சகோதரிகள் இயேசுவினிடம் ஆட்களை அனுப்பினார்கள். ஆனால், இயேசு உடனடியாக பெத்தானியாவுக்குச் செல்லவில்லை. மார்த்தாள், மரியாள், லாசரு ஆகியோரை இயேசு அதிகம் நேசித்தார். ஆனாலும், பெத்தானியாவிற்குப் புறப்படுவதற்கு முன்பாக, மேலும் இரண்டு நாட்கள் இருந்த இடத்திலேயே தங்கினார். தன்னுடைய சீடர்களிடம் லாசரு "நித்திரையாயிருக்கிறான்" என்று சொன்னார். ஆனால், அவர்களால் அதை சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகையால், அவர்களிடம், "லாசரு மரித்துப் போனான்" என்று வெளிப்படையாகவே சொல்லிவிட்டார்.

இயேசு, பெத்தானியாவுக்கு வந்த போது, லாசரு மரித்து நான்கு நாட்கள் ஆகிவிட்டது. அப்பொழுதும், மார்த்தாள், மரியாள் ஆகியோரை ஆறுதல் படுத்தும்படியாய் அவர்கள் வீட்டில் அவர்கள் வீட்டில் அநேகர் இருந்தனர். இயேசு அங்கே வந்து சேர்ந்தபோது, லாசருவின் சகோதரிகள் இருவரும் அவரிடம், "நீர் இங்கே இருந்தீரானால் தங்கள் சகோதரன் மரித்திருக்கமாட்டான்" என்று சொன்னார்கள். இயேசுவில், அவர்கள் அதிக நம்பிக்கை

வைத்திருந்தனர். மார்த்தாள், "இப்பொழுது நீர் தேவனிடத்தில் கேட்டு கொள்ளுவதெதுவோ அதைத் தேவன் உனக்குத் தந்தருளுவார்" என்றாள். அவர்களுடைய நண்பர்கள் அனைவரும் அழுதனர். இயேசுவால் மாத்திரமே அந்தச் சூழ்நிலையில் அவர்களுக்கு உதவி செய்ய முடியும்.

லாசருவின் சகோதரிகளும், அவர்களுடைய நண்பர்களும் எவ்வளவு பாதிப்படைந்திருக்கிறார்களென்பதை இயேசு கண்டு மிகுந்த துக்கப்பட்டார். அவரை கல்லறைக்கு அழைத்துச் சென்ற போது, தன்னால் நேசிக்கப்பட்டவர்களின் துயரத்தையும், வேதனையும் பகிர்ந்து கொண்டு தானும் அழுதார். லாசரு புதைக்கப்பட்டிருந்த கல்லறையின் வாயிலில் ஒரு பெரிய கல் புரட்டி வைக்கப்பட்டிருந்தது. இயேசு "கல்லை எடுத்துப் போடுங்கள்" என்றார். அப்பொழுது, மார்த்தாள், அது நல்ல யோசனை என்று நினைக்கவில்லை. கல் எடுத்துப் போடப்பட்ட பிறகு, தன்னுடைய பரலோக தகப்பனை நோக்கி ஜெபித்தார். அங்கே கூடியிருந்த அநேகருக்கும், மார்த்தாள், மரியாள் போன்றவர்களுக்கும், இந்த அற்புதத்தின் மூலமாக தான் யார் என்பது நிரூபிக்கப்பட வேண்டுமென்று விரும்பினார். அத்தோடு யோவான் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள இந்த ஏழாம் அற்புதத்தின் மூலம், தேவன் மகிமைப்பட வேண்டுமென்பதும் முக்கியமானது.

ஜெபித்ததற்குப் பிறகு, "லாசருவே, வெளியே வா" என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அவனுடைய கைகளும், கால்களும் பிரேதச் சீலைகளால் கட்டப்பட்டிருந்த அந்த நிலையிலேயே அவன் வெளியே வந்தான். இயேசு அவர்களை நோக்கி, "இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள்" என்றார். இந்த அற்புதத்தின் மூலம், இயேசு தேவனுடைய குமாரன் என்று அநேகர் விசுவாசித்ததோடு தேவனைத் துதித்து அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்கள்.

இன்றைக்கும் தேவன் மரித்தோரிலிருந்து யாரையும் உயிரோடு எழுப்பவதில்லை. ஆனால், இதுபோன்ற அநேக மகத்தான அற்புதங்களை அவருடைய வேத வசனங்களில் வாசிக்கிறோம். யோவான் சொல்வது போல "இந்தப் புஸ்தகத்திலே எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே, நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" (யோவான் 20:30,31)

வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள எல்லா அற்புதங்களையும் படிப்பதன் மூலம் இயேசுவைப் பற்றி, சிறு பிள்ளைகளாகிய நாம் அதிகமாய்த் தெரிந்து கொள்ளலாம். அதன் மூலம் நம்மைப் படைத்து, வழி நடத்துகிற நம்முடைய பரலோகத் தந்தையை மகிமைப்படுத்துவோம்.

**R. ஏபில் ரோஜர் நாயகம்**

“ துருவின் சாட்சி ” நூலில் இருந்து

பாடம் - 3 (சென்ற மாதத் தொடர்ச்சி)

# பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தல்

**நோக்கம்**

பரலோகத்தில் நாம் சேர்த்து வைக்கும் பொக்கிஷங்களே நம்முடைய உண்மையான பொக்கிஷங்களாயிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள உதவுவது.

**உங்கள் சிந்தனைக்கு**

நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஒரே வாழ்க்கை சீக்கிரமாய் கடந்து போகும். ஆனால், கிறிஸ்துவுக்காக நாம் எதைச் செய்கிறோமோ அது நிலைத்து நிற்கும்.

**முன்னுரை**

புதிய ஏற்பாட்டை நாம் படிக்கும்போது ஐந்து வசனங்களில் ஒரு வசனம் பணத்தைப் பற்றி தான் பேசுகிறது. நம்முடைய கர்த்தர் இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில் பணம் பற்றி அடிக்கடி பேசியிருக்கிறார். அவருடைய உவமைகளில் சுமார் பாதி உவமைகள் பணத்தைப் பற்றித் தான் பேசுகின்றன. பணத்தைக் கையாளுகிற காரியத்தில் ஞானத்தோடு நடக்காத தம்முடைய சீஷர்களை இயேசு கடிந்து கொண்டார்.

மத்தேயு 25:27 “அப்படியானால், நீ என் பணத்தைக் காசுக்காரர் வசத்தில் போட்டுவைக்க வேண்டியதாயிருக்கிறது; அப்பொழுது நான் வந்து என்னுடையதை வட்டியோடே வாங்கிக் கொள்வேனே என்று சொன்னார்”. இந்த மனுஷன் தன்னுடைய பணத்தை ஒழுங்காக முதலீடு செய்யாததன் காரணமாக இயேசு கடிந்து கொள்கிறார். இந்த மனிதன் தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டியிருந்தது போல, நாமும் நம்முடைய பணத்தை எப்படிப் பயன்படுத்தினோம் என்பது குறித்து தேவனிடத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

லூக்கா 19:23, “பின்னை ஏன் நீ திரவியத்தைக் காசுக் கடையிலே வைக்கவில்லை, வைத்திருந்தால் நான் வரும்போது அதை வட்டியோடே வரப்பற்றிக் கொள்வேனே என்றார்”. தன் எஜமானுடைய திரவியத்தை முறையாகப் பயன்படுத்தாதற்காக இந்த மனிதன் கடிந்து கொள்ளப்பட்டான். ஞானமாகப் பணத்தை பயன்படுத்தாதற்காக தாங்கள் இழந்து போனோம் என்பதை நியாயத் தீர்ப்பு நாளில் எத்தனை பேர் தெரிந்து கொள்ளப் போகிறார்கள்?

## I பூமிக்குரிய பொக்கிஷங்கள்

கோடிக்கணக்கான மக்கள் பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கும்படியாக வருடம் முழுக்க ஒவ்வொரு நாளிலும் உழைக்கிறார்கள். அப்படிச் சம்பாதிப்பவைகளை அநேகர் கொஞ்ச நாளில் இழந்து போகிறார்கள். துணி துவைத்து, அயர்னிங் செய்யக்கூடிய ஒரு பெண்ணைக் குறித்து எழுதப்பட்டதை நான் படித்திருக்கிறேன். அவள் தனது நாற்பதாண்டு கால உழைப்பில் ரூ. 1,50,000/- சேர்த்து வைத்திருந்தாள். அந்தப் பணத்தைக் கொண்டு ஓர் அழகிய சிறிய வீட்டைக் கட்டி குடியேறினாள். இரண்டு நாளில் அவ்வீடு தீயினால் அழிக்கப்பட்டது. தனக்குண்டான எல்லாவற்றையும் இழந்தாள்.

அநேகர் பங்குச் சந்தைகளிலும், பத்திரங்களிலும் முதலீடு செய்து, பூமியில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதின் முட்டாள்தனத்தை குறுகிய காலத்தில் உணர்ந்து கொள்ளுகிறார்கள். பங்குச் சந்தைகளிலும், பத்திரங்களிலும் முதலீடு செய்த பல்லாயிரக்கணக்கானோர் போட்ட பணத்தையே இழந்திருக்கிறார்கள். கிறிஸ்தவ அறத்திற்கு ஏற்ப பூமியில் முதலீடு செய்து, ஒவ்வொரு முதலீட்டிலும் லாபம் பண்ணினாலும், இந்த வாழ்க்கையை விட்டுப் போகும் வேளை வந்தால், ஒரு பைசா கூட இல்லாமல் எல்லாவற்றையும் விட்டுச் செல்ல வேண்டியிருக்கும். பணத்தில் மிகவும் குறியாக இருந்த பியர்பான்ட் மார்கன் என்ற மனிதன் மரித்த போது, அவர் எவ்வளவு விட்டுச் சென்றார் என்று ஒருவர் கேட்டார். அதற்கு மற்றொருவர், எல்லாவற்றையும் என்று பதில் சொன்னார். பூமியில் நீங்கள் முதலீடு செய்யும் ஒவ்வொன்றையும், நீங்கள் மரிக்கும் போது, இங்கேயே விட்டுச் செல்லுவீர்கள் என்பது நினைவிலிருக்க வேண்டும்.

## II பரலோக முதலீடு

நாம் இப்போது சில உண்மைகளை அலசுவோம். இயேசு நாம் பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருப்பதாலும், பொக்கிஷங்களை நாம் இவ்வுலகத்தை விட்டுப் போகையில் நம்மோடு எடுத்துச் செல்ல முடியாமல் இருப்பதாலும், நாம் அதை எப்படிச் செய்வது என்பது பற்றி சிந்திப்பது அவசியமாயிருக்கிறது. ஒரு தனிப்பட்ட நபர் அவர் உயிரோடிருக்கும் நாளில் பணத்தை பதுக்கி வைத்து அவர் மரிக்கும் போது நான் என் பொக்கிஷங்களை என்னோடு கொண்டு செல்ல விரும்புகிறேன் என்று தன் உயிலில் எழுதி வைக்கிறார். ஆனால், பொக்கிஷங்களை நாம் இந்த பூமியில் இருந்து கடந்து போகும்போது கொண்டு செல்ல முடியாது. மாறாக, நாம் இந்த உலகத்திலிருந்து கடந்து செல்வதற்கு முன்பாக அதை நாம் நமக்காக அனுப்பி வைக்க வேண்டும்.

நியாயத்தீர்ப்பின் நாளிலே ஓர் உண்மையுள்ள கிறிஸ்தவனைப் பார்த்து கிறிஸ்து "இவைகள் எல்லாம் உன் பொக்கிஷங்கள்" என்று சொன்னால் அது எவ்வளவு அருமையாக இருக்கும்!.

ஓர் உண்மையுள்ள தேவனுடைய பிள்ளை தொடர்ந்து பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைப்பது ஆசீர்வாதமானது. ஒவ்வொரு கர்த்தருடைய நாளின் போதும் நாம் கர்த்தருக்கென்று காணிக்கைக் கொடுக்கும்போது அது ஞானமான முதலீடு என்பதைப் பற்றிய அறிவு நமக்கு பூரண நிச்சயத்தைக் கொடுக்கிறது, ஏனென்றால், பரலோகத்தில் நாம் சேர்த்து வைப்பவைகளை நம்மிடமிருந்து யாராலும் எடுத்துக் கொள்ளவே முடியாது. உபத்திரவத்தால் அதை அழிக்க முடியாது. தந்திரமான நேர்மையற்ற மனிதர்கள் நம்மை மேற்கொள்ள முடியாது. யுத்தங்கள், பஞ்சங்கள், வெள்ளப்பெருக்குகள், வியாதிகள், மரணங்கள் கூட நம்மை அதினின்று பிரிக்க முடியாது.

சுவிசேஷத்தை பரப்புவதற்காகவோ, அநாதைகளை போஷிப்பதற்காகவோ, கிறிஸ்தவத்தின் காரியங்களை மேம்படுத்துவதற்காகவோ நான் கொடுக்கும் ஒவ்வொரு பணமும் பரலோக முதலீடாக இருக்கிறது. அதை நம்மிடமிருந்து யாரும் எடுத்துக் கொள்ள முடியாது. ஒரு சகோதரனுடைய விசுவாசம் பலமாகி மேற்சொன்ன காரியங்களில் ஒன்றிற்கு பொருளாதார உதவி செய்யும் போது அவர் பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறார். அப்போது அவரைக் கடிந்து கொண்டோ, அல்லது மன்றாடியோ, ஊழியத்திற்கென்று கொடுக்கச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அப்போது மோசே சொன்னது போல நாமும் சொல்ல முடியும். அப்பொழுது மோசே இனி புருஷர்களாவது ஸ்திரீகளாவது பரிசுத்த ஸ்தலத்துக்கென்று காணிக்கையாக ஒரு வேலையும் செய்ய வேண்டாம் என்று பாளயம் எங்கும் கூறும்படி கட்டளையிட்டான். இவ்விதமாய் ஜனங்கள் கொண்டு வருகிறது நிறுத்தப்பட்டது (யாத். 36:6) வாரந்தோறும் நாம் பாரலோகத்தில் முதலீடு செய்கிறதாக நாம் திட்டமிட்டுக் கொடுத்தால் நம்முடைய காணிக்கை இரண்டு மடங்கு அல்லது மூன்று மடங்கு இன்னும் பல மடங்கு அதிகமாகும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

சில நாட்களுக்கு முன்பு செய்தித்தாளிலே இப்படியாக ஒரு செய்தி வந்தது. அந்தக் கடிதத்தை எழுதியவர் பரலோக முதலீட்டில் நம்பிக்கை உடையவர், அவர் சொன்னது, அடுத்த ஞாயிறு நீங்கள் பரலோகம் பற்றிப் பேச இருக்கிறீர்கள். பரலோகத்தில் எனக்கு ஐம்பது வருடங்களாக ஆஸ்தி இருப்பதால் அந்த இடத்திற்கு செல்வதற்கு நான் விருப்பமுடையவனாயிருக்கிறேன். இதை நான் ஒப்புக்குச் சொல்லவில்லை. அரை நூற்றாண்டுக்கும் மேலாக, எனக்காக வீட்டைக் கட்டி கொண்டிருக்கின்ற இவ்வுலகத்தின் மிகச்சிறந்த கட்டிடப் பொறியாளராகிய தேவனிடம் அனுப்பிக் கொண்டிருக்கிறேன். தேவன் எனக்காகக் கட்டும் வீட்டை திரும்பக் கட்டுவதற்கோ அல்லது பழுது பார்ப்பதற்கோ அவசியமில்லை. ஏனென்றால், அது எனக்கு ஏற்றதாயிருக்கும். அது காலத்தால் அழியாது. காலங்களின் கன்மலையில் அது அஸ்திபாரம் போடப்பட்டிருக்கிறபடியால் பூச்சிகள் ஒன்றும் அஸ்திபாரத்தை சேதப்படுத்தாது. அக்கினியால் அதை அழிக்க

முடியாது. வெள்ளப்பெருக்கு ஒன்றும் அதை அடித்துச் செல்லாது. அதன் கதவுகளில் தாழ்பாழ்களோ, பூட்டுகளோ வைக்கப்பட மாட்டாது. தீய எண்ணம் கொண்ட எந்த ஒரு மனிதனும் என்னுடைய குடியிருப்பு இருக்கிற இடத்திற்குள் பிரவேசிக்கிவே முடியாது. நான் நிராகரிக்கப்படுவேனோ என்ற பயமின்றி நித்திய சமாதானத்திற்காக அந்த வீட்டிற்குள் பிரவேசித்து நிலைத்திருக்க அவ்வீடு கிட்டத்தட்ட ஆயத்தமாகி விட்டது.

நான் சீக்கிரமாக பயணிக்கப் போகிற இடத்திற்கு இடையில் ஆழமான நிழல் பள்ளதாக்கு ஒன்று உள்ளது. இந்த பள்ளத்தாக்கை நான் கடக்காமல் அந்த பட்டணத்திலுள்ள என் வீட்டை சென்றடைய முடியாது. ஆனால், நான் அதைப் பற்றி பயப்படவில்லை. ஏனென்றால், முன்பு இதே பள்ளத்தாக்கின் வழியாகத்தான் என்னுடைய சிறந்த நண்பர் வெகு காலத்துக்கு முன்பு கடந்து சென்று இருளை விரட்டிவிட்டார்.

ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாக நாங்கள் பரிச்சயமானதிலிருந்து வாழ்க்கையின் எல்லா நிலையிலும் அவர் என்னோடு இருந்தார். அவர் என்னைக் கைவிடுவதுமில்லை தனியாக விடுவதுமில்லை என்கிற அவருடைய வாக்குத்தத்தத்தை அச்சிடப்பட்ட நிலையிலே வைத்துள்ளேன். இந்த ஆழமான பள்ளத்தாக்கு வழியாய் கடந்து செல்லும் போது அவர் என்னோடிருப்பார், அவர் என்னோடிருக்கும் போது நான் வழி தப்பி போகமாட்டேன். பரலோகம் செல்லுவதற்கான என்னுடைய சீட்டில் பயணத்திற்கான தேதி குறிப்பிடப்படவில்லை. திரும்பி வருவதற்கான சீட்டும் இல்லை, சாமான்கள் எடுத்துச் செல்வதற்கும் அனுமதி கொடுக்கப்படவில்லை ஆம், நான் போக ஆயத்தமாயிருக்கிறேன். அடுத்த ஞாயிறு நீங்கள் இங்கே பேசும் போது நான் இல்லாமலிருக்கலாம். ஆனால், பரலோகில் நாம் சந்திக்கலாம் என்று எழுதியிருந்தார்.

**(தொடரும்)**

## நாளும் நடப்பும்

1. தமிழ்நாட்டில் மேலும் 42 புதிய பொறியியில் கல்லூரிகள் திறக்க ஏ.ஐ.சி.டி.இ. அனுமதி.
2. மத்தியில் ஆளும் காங்கிரஸ் கூட்டணியின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நாடு முழுவதும் நடத்த ஏற்பாடு.
3. மத்திய அமைச்சரவையில் மாற்றம் விரைவில் வர வாய்ப்பு
4. இலங்கையில் ஐ.நா. சபையின் நிபுணர் குழு ஆய்வு நடத்த கடும் எதிர்ப்பு
5. எல்லை மாநிலமான ஜம்மு-காஷ்மீரில் நிலைமை பதட்டமாக உள்ளது.
6. குறைந்தது ஆறு மாநிலங்களில் மாவோயிஸ்ட் பிரச்சினை அரசுக்கு சவாலாக உள்ளது.
7. 76 ஆண்டு கால கால்பந்து வரலாற்றில் ஸ்பெயின் நாடு முதல் முறையாக உலகக் கோப்பையைத் தட்டிச் சென்றுள்ளது.

# துன்பப்படும் கர்த்தருடைய தாசன்

**பா**ரில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும், தன் வாழ்நாளில் பாடுகளை சகித்தே தீர வேண்டுமென்ற உண்மை உலகறிந்த ஒன்று. நாம் நமது சரீர மற்றும் ஆன்மீக வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் துவண்டு போகாமலிருக்க, நமது ஆண்டவர் இப்புவியிருக்கையில் தன்னோடு மூன்றரை ஆண்டுகள் ஊழிய பாதையில் உடனிருந்தவன் தன்னை முத்தம் செய்து காட்டிக்கொடுத்தானே அந்த துரோகத்தை சகித்தார், மீன் பிடிக்கிறவனை மனிதர்களைப் பிடிக்கிறவனாக்குவேன் என்றழைத்தார், ஆனால், அவனோ இவரை அறியேன் என்றல்லவா மறுதலித்தான். அதையும் தாங்கிக்கொண்டாரே நமது சிருஷ்டி கர்த்தர், எல்லாம் எதற்காக? இவ்வுலகின் வாழ்வில் நாமும் இப்படிப்பட்டவைகளைக் கடந்து இப்பொழுது அவரிருக்கும் பரலோகம் சென்றடையத்தானே! அந்த தியாகசீலரைப் பற்றியத் தீர்க்கதரிசனத்தைக் குறித்து சிந்திக்கலாவோம் வாருங்கள்.

இத்தலைப்பின் கீழாக இதுவரை, ஏசாயாவைப் பற்றியும், அவர் எழுதிய நூல் பற்றியும், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அவர் எழுதிய நூலிலிருந்து எவ்வாறு மேற்கோள் காட்டினார்கள் என்பதையும், துன்பப்படும் கர்த்தருடைய தாசனைப் பற்றி ஏசாயா நான்கு பகுதிகளில், முதல் பகுதியான 42:1-4 வசனங்களில், முதலாவது வசனத்தைப் பற்றியும் இதுவரை படித்திருக்கிறோம், அதன் தொடர்ச்சியாக நாம் இரண்டாவது வசனத்திலிருந்து படிப்போம்.

“அவர் கூக்குரலிடவுமாட்டார், தம்முடைய சத்தத்தை உயர்த்தவும் அதை வீதியிலே கேட்கப்பணணவுமாட்டார்” (ஏசாயா 42:2) என்று வாசிக்கிறோம். கர்த்தருடைய தாசன் இவ்வுலகத்திலிருக்கும் அரசர்களிலிருந்து வித்தியாசமானவர், அவர்களைப் போல இவர் கொக்கரிக்கவும், கூக்குரலிடவு மாட்டார். கள்ளப் போதகரோடு, அவர் தனது சத்தத்தை உயர்த்தி வாக்குவாதம் செய்யாமல், தனது வல்லமையுள்ள வார்த்தைகளை அதிகாரத்தோடு பேசுவார் என்று ஏசாயா இவரைக் குறித்து விவரிக்கிறார் (யோவான் 7:46; மத்தேயு 7:28,29).

“அவர் நெரிந்த நாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்” (ஏசாயா 42:3). கர்த்தருயை தாசனாகிய நமது ஆண்டவர் இப்பூமியில் இருந்தபோது ஆவிக்குரிய ரீதியில் பெலவீனராயிருந்த ஜனங்களை புறம்பே தள்ளவில்லை. மாறாக அவர் திரளான ஜனங்களை கண்டபோது, மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலிருந்த அவர்கள் மேல் மனதுருகி, ஆவிக்குரிய காரியங்களை அவர்களுக்கு விவரித்தார். (மாற்கு 6:34). சில,

வேளைகளில் இப்படிப்பட்டவர்களுக்காக, பிதாவிடம் வேண்டுக் கொள்ளும்படி தமது சீஷர்களை கேட்டுக்கொண்டார் (மத். 9:35-38).

ஒரு வீட்டில் ஏற்றப்பட்ட விளக்கில் எண்ணெய் குறையும் போது, திரி மங்கி எரியும், அத்தோடு கண்களுக்கும் அது எரிச்சலை உண்டாக்கும், அப்பொழுது அந்தத் திரி பெரும்பாலும் அணைக்கப்பட்டு விடும், இது உலக வழக்கம். ஆனால் நமது ஆண்டவர் ஆவிக்குரிய ரீதியில் மங்கி எரியும் திரிகளான ஆத்து மாக்களை அணைக்காமல், அதை சரி செய்து, எண்ணெய் ஊற்றி மீண்டும் பிரகாசமாக எரிய வைக்கிறார். ஆகவே தான் ஒரு பாவியை மனந்திரும்பச் செய்வது மிக முக்கியமென்று யாக்கோபு ஆசிரியர் எழுதுகிறார் (யாக்கோபு 5:20).

புதிய ஏற்பாட்டை நமக்குத் தந்த நமது ஆண்டவர் நம்மால் சுமக்கிறதற்கு அரிய சுமையை நம்மேல் சுமத்தவில்லை (மத்தேயு 23:4; அப்போ. 15:5,10). அவருடைய அழைப்பைப் பாருங்கள், தனது நுகம் மெதுவாகவும், சுமை இலகுவாகவும் இருக்கிறது எனச் சொல்லி அழைக்கிறார். அவருடைய கரிசனை யான அழைப்பை ஏற்றுக்கொள்கிற நாம் ஒன்று செய்ய வேண்டும், அவரிடத்தில் நாம் கற்றுக்கொள்ள வேண்டும் (மத். 11:28-30).

பாக்கிய வசனங்கள் என்று நம்மால் அழைக்கப்படும் மலைப் பிரசங்கத்தின் முதல் வசனமே, "ஆவியில் எளிமையுள்ள வர்களை" பற்றித்தான் பேசுகிறது. (மத். 5:3-12). அந்த வசனங் கள் எல்லாவற்றையும் வாசித்துப் பார்க்கும்போது நமது ஆண்டவர் நம்மீது எவ்வளவு கரிசனை உள்ளவராக இருக்கிறார் என்று நம்மால் உணர முடியும். பிரியமானவர்களே, நமது ஆண்டவரை குறித்து சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களை பற்றி கவனமாக படித்தோம். நம்மேல் கரிசனை கொண்ட அவரை ஏற்றுக்கொள்வோம், அவரிடம் கற்றுக்கொள்வோம், தேவ ஆசீர்வாதம் பெறுவோம்.

**ஜே. பிக்கின்ஸ்**

## மனிதனும், சபையும்

*1. மனிதன் சபையைத் திட்டமிடவில்லை - எபே. 3:10-11*

*2. மனிதன் சபைக்காக விலை கொடுக்கவில்லை - அப். 20:28*

*3. மனிதன் சபை அங்கத்தினர்களுக்குப் பெயரிடவில்லை - ஏசா. 56:5; 66:2, அப். 11:26*

*4. மனிதன் சபையிலே ஜனங்களைச் சேர்க்கவில்லை - அப். 2:47; 1 கொரி. 12:18*

*5. மனிதன் சபைக்கான உபதேசங்களைக் கொடுக்கவில்லை - கலா. 1:8-11; 2யோவான் 9-11.*

# நீங்கள் சேர்ந்துள்ள இடம்!

இஸ்ரவேலர் எகிப்தில் அடிமைகளாய் இருந்த போது தேவன் தமது வல்லமையுள்ள கரத்தினால் அவர்களை விடுதலையாக்கி சீன் வனாந்திரத்திலுள்ள சீனாய் மலையருகே கொண்டு வந்து சேர்த்த போது அவர்களின் வாழ்க்கைக்கு தேவையான சட்டதிட்டங்களை மோசேயின் மூலமாகக் கொடுத்தார். நமது நாடு கூட சுதந்திரம் அடைந்த பின்பே நமக்கென்று சட்டதிட்டங்களை மோசேயின் மூலமாகக் கொடுத்தார். நாம் அறிந்த ஒன்றே. கிறிஸ்துவின் சபையாராக இருக்கும் நமக்கும் கூட புதிய ஏற்பாட்டு சட்டதிட்டங்கள் நம் ஆண்டவர் மூலம் கொடுக்கப்பட்டிருக்கிறது (எபி. 12:22) கிறிஸ்துவின சபையார் இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாகி தேவனுடைய அன்பின் குமாரனுடைய ராஜ்ஜியத்திலிருக்கிறார்.

ஒரு ராஜ்ஜியம் இருக்கும் போது அதற்குரிய சட்டதிட்டங்களும் இருக்கும் அல்லவா? அதுவே கிறிஸ்துவின் ரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கை ஆகும். நாம் இப்போது எங்கு *வந்து சேர்ந்துள்ளோம் என்று எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் 12:22-24 வரையிலான வசனப்பகுதியில் காண்கிறோம்.* முதலாவது "சீயோன் மலை" என்பது எருசலேம் பகுதியில் காணப்படும் நான்கு குன்றுகளில் முக்கியமான ஒன்றாகும். சபையைப் பற்றிய தீர்க்கதரிசனத்தில் ஏசா 2:2,3ல் காண்கின்றபடி சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிருந்து கர்த்தருடைய வசனமும் புறப்படும் என்பது நிறைவேறிய முக்கிய தீர்க்கதரிசனமாகும். அப். 2ம் அதிகாரத்தில் சபை துவக்கத்தையும் அப் 8ம் அதிகாரத்தில் அங்கிருந்து சுவிசேஷம் பரவினதையும் வாசிக்கின்றோம். அதன்படி நாம் இரட்சிக்கப்பட்டு சபையில் தேவனால் சேர்க்கப்பட்டபோது சீயோன் மற்றும் பரம எருசலேமினிடத்திற்கும் வந்து சேர்ந்திருக்கின்றோம். ஏசா 10:24ன் படி சீயோனில் இருப்பவர்களே "தேவனுடைய ஜனம்" என்ற மேன்மையை பெறுகிறது. அதுபோல 1பேதுரு 2:9ன் படி கிறிஸ்துவின் சபையாரே தேவனுக்கு சொந்தமான ஜனமாயிருக்கிறார்கள். நீதி, நியாயம் மனிதனுக்கு சபை வாழ்க்கையில் மட்டுமே வாக்களிக்கப்பட்டுள்ளது (ஏசா 33:5) இன்றைய நாட்களில் தேவனை துதிப்பதும், காணிக்கை செலுத்துவதும் கிறிஸ்துவின் சபையிலிருந்து மட்டுமே தேவனால் அங்கீகரிக்கப்படும் (சங். 116:17-19) போலி மனிதர்களிடமிருந்தல்ல உண்மையான ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவின் சபையில் மட்டுமே வாக்களிக்கப்பட்டுள்ளது. சங். 128:5 தேவன் வாசம் பண்ணும் இடமும் கிறிஸ்துவின் சபையில்

தான் என்பதை உணர்ந்து நாம் பெருமிதம் கொள்ள வேண்டும். (சங். 135:2, 1கொரி. 3:16). அதுமாத்திரமல்ல பரலோகத்தின் தேவன் தம் குமாரன் மூலமாக ஆளுகை செய்யும் இடமும் கிறிஸ்துவின் சபையே ஆகும். சங். 146:10; கொலோ 1:13 நீங்கள் சோர்ந்து போகும் போது வேண்டிய ஆறுதலும் பெலனும் சபையிலே தான் உண்டு. (ஏசா 61:3, 66:13, 2கொரி 1:3)

இரண்டாவதாக, நீங்கள் சேர்ந்துள்ள இடம் ஆயிரம், பதினாயிரமான தேவதூதர்களிடம் ஆகும். சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஒருவர் தேவனிடம் மனந்திரும்பும் போதே பரலோகத்தில் தூதர்கள் மத்தியில் மிகுந்த சந்தோஷம் உண்டாகின்றது (லூக். 15:10) ஏற்கனவே அவர்கள் தேவனை பரிசுத்தர், பரிசுத்தர் என்று ஓய்வில்லாமல் துதித்துக்கொண்டிருக்கையில், பூமியில் நாம் கிறிஸ்துவின் சபையாராக ஒன்றுகூடி இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப்பிரியமான ஆவிக்கேற்ற பலிகளை செலுத்துகிறபடியினால் நம் தொழுகையை தேவதூதர்கள் ஆச்சரியத்தோடே உற்றுப்பார்க்கின்றார்கள் (1பேது 2:5, 1பேது 1:12) இந்தக் காரணத்தினால் தான் சபைக்கூடுதலில் ஸ்திரீகள் முக்காடு இட்டுக்கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலர் உபதேசம் கட்டளையிட்டிருக்கிறது (1கொரி. 11:10).

மூன்றாவதாக, நீங்கள் சேர்ந்துள்ள இடத்தில் உள்ளவர்களின் பெயர்கள் பரலோகத்தில் முதற்பேறானவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் சீஷர் தங்களுக்கு அசுத்த ஆவிகள் கீழ்ப்படிந்ததை மகிழ்ச்சியோடே ஆண்டவரிடம் அறிவித்தபோது அவர் சொன்னது என்ன? உங்கள் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருப்பதற்காக சந்தோஷப்படுங்கள் (லூக். 10:20) என்று குறிப்பிட்டு சொன்னார். நாம் கிறிஸ்துவின் சபையில் இணைக்கப்பட்டபோது நமக்கு பரலோகக் குடியுரிமை உறுதியாக்கப்பட்டது பிலி. 3:20. நாம் சபை வாழ்க்கையில் உண்மையாகப் பிரயாசப்படும்போது நம் பெயர்கள் பரலோகில் நிச்சயம் உண்டு பிலி. 4:3.

நான்காவதாக, நீங்கள் சேர்ந்துள்ள இடம்? எல்லோருக்கும் நியாயாதிபதியாக இருக்கும் தேவனிடத்தில் வந்து சேர்ந்துள்ளீர்கள்! சோதோம் அழிவில் நீதிமானாயிருந்த லோத்துக்காக, ஆபிரகாம் தேவனிடம் பரிந்து பேசும் போது அவரை சர்வலோக நியாயாதிபதி என்று குறிப்பிடுகிறார். அப். 17:31ன்படி இந்த தேவனே தமது குமாரன் இயேசுவை கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அநேகர் இன்றைய நாட்களில் தேவனை அறியாத ஆண்டவர் இயேசுவை மட்டும் அரைகுறையாக அறிந்த மக்களாக இருக்கின்றனர். கிறிஸ்துவின் சபையாராகிய நாம் மட்டுமே தேவனுடைய சித்தப்படி ஜீவனுள்ள

தேவனை ஆண்டவர் இயேசுவின் மூலம் ஆராதிக்கின்றோம் என்பது மிகவும் பெருமைப்படக்கூடிய விஷயமாகும் (எரே 9:24, 1கொரிந் 1:30,31) தேவனுக்கே மகிமை!.

ஐந்தாவதாக, நீங்கள் நீதிமான்களின் ஆவிகளிடத்தில் வந்து சேர்ந்துள்ளீர்கள்! யார் இந்த நீதிமான்களின் ஆவிகள்? எபிரெயர் 11ம் அதிகாரம் முழுவதிலும் குறிப்பிட்டுள்ள ஆபேல், நோவா, ஆபிரகாம் முதற்கொண்டு தாவீது, சிம்சோன் மற்றும் கிறிஸ்துவுக்காக மரித்த அநேக ரத்தசாட்சிகளையும் இது குறிப்பிடுகிறது. அவர்கள் நம்மையல்லாமல் பூரணராக முடியாது என்று ஆசீர்வாதம் நமக்குண்டு (எபி. 11:39,40).

ஆறாவதாக, நீங்கள் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத் திற்கு வந்து சேர்ந்துள்ளீர்கள் கலாத் 3:19ன் படி மோசே பழைய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக உள்ளார். மோசே உட்பட அவருடன் புறப்பட்டவர்கள் யாருமே கானானுக்குள் பிரவேசிக்க முடியவில்லை. அந்த மக்களின் பிள்ளைகளும், காலேப், யோசுவா மட்டுமே கானானில் பிரவேசித்தனர். ஆனால், ஆண்ட வர் இயேசு தமது பாவமில்லாத சொந்த ரத்தத்தை பிரதிஷ்டை செய்துள்ளபடியால், நமது பெலவீனங்களில் நமக்கு உதவி செய்து தொடர்ந்து பரிசுத்த வாழ்க்கை வாழ நமக்காக தேவனி டம் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் (1யோவா 2:1) ஆக, இவரே தேவனுக்கும், மனுஷருக்கும் ஒரே மத்தியஸ்தர் (1தீமோ 2:5) அதனால் தான் கிறிஸ்துவின் சபையராகிய நாம் இவர் மூலம் ஜெபிக்கின்றோம் (யோவான் 16:23) இவர் மூலமாக தேவனை துதித்து தொழுகின்றோம் (எபி. 13:15).

கடைசியாக, அதிக நன்மையானவைகளை பேசும் இயேசு வின் ரத்தத்தினிடத்திற்கு நீங்கள் எங்கு வந்து சேர்ந்துள்ளீர்கள்! ஆபேலின் ரத்தம் நீதியுள்ளது தான். ஆனால், அது அவனுக்காக மட்டுமே தேவனிடம் பேசிய நம்முடைய ஆண்டவர் இயேசுவின் ரத்தமோ சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்யக் கூடியது (1யோவா 2:2) இவருடைய ரத்தம் தெளிக்கப்பட்ட தால் தான் நாம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டோம் (1பேது 1:19) அதினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே, நாம் பரலோகம் செல்வது அதிக நிச்சயமாயிருக்கிறது (ரோமர் 5:9).

நாம் கிறிஸ்துவின் சபையிலிருப்பதற்காக தேவனுக்கு நன்றி சொல்லி மேன்மை பாராட்டுவோமாக. ஆமென்.

**K. பாண்டியன்,**
*பாண்டிச்சேரி.*

## "கிருபையுள்ள வார்த்தை" தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : சகோ. பிலேமோன் ராஜா, மதுரை.

| | | | |
|---|---|---|---|
| Z தமிழ் | TV | வெள்ளி | காலை 5:30 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | காலை 7:45 மணி |

## "கிறிஸ்துவின் வசனம்" தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : சகோ. அர்ச்சுனன், வத்தலக்குண்டு.

| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| இமயம் | TV | புதன் | காலை 6:30 மணி |



## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Thursday Sunday | 6.45 - 7.00 a.m. | Box. 3815 New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sundays, Mondays, Tuesdays, Thursdays, | 2.00 - 2.15 p.m. | Box. 80 Kakinada - 533 001 | Joshua Gootam |
| TAMIL | Mondays, Tuesdays, Thursdays, Fridays, | 5.30 - 5.45 p.m. | Box. 8405 Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Fridays | 3.45 - 4.00 p.m. | Box. 5540 Thiruvananthapuram - 695 034. | P.K. Varghese |

Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.

# திருமறை ஆசான்

இதழ் ஆசிரியரின்

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| இமயம் | TV | வியாழன் | காலை | 6:00 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
**Editor. S. Rajanayagam.**